






















25வது வெள்ளி விழா 2021

# UTHAYAN உதயன்

$1.00

416-752-1524
416-752-6703

உதயம் 1311 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 21, 2021


# ஸ்காபரோ சுரங்கப் புகையிரத விரிவாக்கத்திற்கான 2.26 பில்லியன் டாலர் முதலீடு செய்வது குறித்து பிரதமர் தலைமையில் கலந்துரையாடப்பெற்றது



கனடியப் பிரதமர், நேற்று முன்தினம் புதன்கிழமை இணையவழி ஊடாக கலந்து கொண்ட ஒரு முக்கிய கலந்துரையாடலில் ரொரன்ரோ பெரும்பாகத்தில் உள்ள பல ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

மேற்படி இணையவழிக் கலந்துரையாடலில், கனடிய அமைச்சரவையின் பொது பாதுகாப்பு மற்றும் அவசர-கால தயாரிப்பு அமைச்சர் பில் பிளேர், உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்கள் தொடர்பான அமைச்சர் கேத்தரின் மெக்கென்னா ஆகியோருடன் இணைந்து, ஸ்காபா-ரோ சுரங்கப்பாதை புகையிரத விரிவாக்கத்திற்கான 2.26 பில்லியன் டாலர் முதலீடு செய்வது உட்பட பொது போக்குவரத்தில் சமீபத்திய கனடிய மத்திய அரசி-ன் நிதி முதலீடு குறித்து பிரதமர் தலைமையில் விவாதிக்கப்பெற்றது

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)



# கோவிட் — 19 தொற்று எண்ணிக்கை தணிந்து சென்றால் ஒன்றாரியோ பாடசாலைகள் மீண்டும் ஜூ ன் மாதத்தில் திறக்கப்படுமா?



ஒன்ராறியோ மாகாணத்தில் இயங்கும் பாடசாலைகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் மீண்டும் திறக்கப்படலாம் என்ற தகவல் எமது ஆசி-ரிய பீடத்திற்கு கிடைத்துள்ளது. ஆனால் இந்த மாற்றம் எதிர்வரும் நாட்களில் கோவிட்-19 தொற்று எண்ணிக்கையை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படும் என்றும், தொற்று எண்ணிக்கை குறைந்து 'சமாளிக்கக் கூடிய' எண்ணிக்கை அமையுமானால் அவ்வாறு பாடசாலைகள் மீண்டும் திறக்கும் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறியப்படுகின்றது.

அவ்வாறு, மாகாணத்தின் அனைத்துப் பகுதியிலும் கோவிட்-10 தொற்று ஒரே அளவில் குறையாவிட்டால், எண்ணிக்கை தொற்று எண்ணிக்கை குறைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மாத்திரம் திறப்பதனை யோசிக்கலாம் என்று "ஒன்றாரியோ மாகாண விஞ்ஞானிகளின் பீடம்" தெரிவித்துள்ளது.

*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*











வணக்கம்! நான்
அனாமி
போல்.
ரொரன்ரோ மத்திய தொகுதிக்கான
உங்கள் வேட்பாளர்
கனடா
பசுமைக் கட்சியின்
தலைவி
"இந்த சமூகமானது ஒட்டாவாவில் எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் எதைப் பேச வேண்டுமோ, எதைச் செய்ய வேண்டுமோ, அவ்வாறான ஒரு அஞ்சாத வெற்றியாளராக விளங்கும் உண்மையான பிரதிநிதித்துவத்தை பெறுதற்குரிய சமூகமாகும்."
எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்
1-833-ANNAMIE
annamie.paul@greenparty.ca
@AnnamiePaulGreen
@AnnamiePaul
→annamiepaul.ca
green PARTY OF CANADA


இலக்கிய வெளி
கலை இலக்கிய அரையாண்டு சஞ்சிகை
இணைய வழி கலந்துரையாடல்
அரங்கு 5
"ஈழத்துச் சிற்றிதழ்கள்"
22-05-2021 சனிக்கிழமை
இந்திய நேரம் மாலை 7.00 | இலங்கை நேரம் மாலை 7.00 | கனடா நேரம் காலை 9.30
சிறப்புப் பேச்சாளர்கள்
தி. ஞானசேகரன்
(ஞானம் சஞ்சிகை பிரதம ஆசிரியர்) இலங்கை,
உரை: "ஈழத்துச் சிற்றிதழ்கள் ஒரு வரலாற்றுப் பார்வை"
பேராசிரியர் செ.யோகராசா
இலங்கை,
உரை : "ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்களிப்பு"
தொகுப்புரை:
கலாநிதி நா.சுப்பிரமணியன்
கனடா,
நன்றியுரை:
எழுத்தாளர் அகில் சாம்பசிவம் கனடா.
Meeting ID: 874 6738 3635
Passcode: 12345
Facebook live
https://www.facebook.com/www.ilakkiyaveli
மேலதிக விபரங்களுக்கு: 001 416 8226316


STEELES PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

# உதயன் கதிரோட்டம்

# ‘குட்டி’ நாடு ஈன்ற ‘குட்டி’யொன்றை தத்தெடுத்துள்ள தந்திரம் மிக்க தேசம் ஒன்று

இந்தப் பக்கத்தில் இலங்கை நாட்டை மாங்கனித் தீவு என்று முன்னர் பல தடவைகள் குறிப்பிட்டு எழுதியிருந்தோம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஆனால், மாங்கனியைப் போன்ற எப்போதும் இனிப்பான விடயங்களை அள்ளி வழங்கக் கூடிய வளங்கள் பல அங்கு இயற்கையாகவே தோன்றியுள்ள போதிலும் அங்கு கசப்பான அனுபவங்களைப் பெற்றவர்களே எண்ணிக்கையில் அதிகம் என்று சொல்லலாம்.

இலங்கை ஒரு சிறிய நாடு என்ற காரணத்தாலும் அதனை ‘மாங்கனித் தீவு’ என்று சுட்டியிருக்கலாம் என்று தோன்றுகின்றது. இவ்வாறான ஒரு குட்டி நாட்டில் கடந்த சில தசாப்த்தங்களாக ‘பெரிய’ நாடுகளின் பார்வை பட்டுத் தெறிப்பது உலகத்தவர்களால் நன்கு உணரப்பட்ட ஒரு விடயமா-கும். இவ்வாறான பெரிய நாடுகள் இந்த குட்டி நாட்டை குறி வைத்திருந்தன என்ற கணித்தவர்களுக்கு கால ஓட்டம் சரியான பதிலைச் சொல்லவில்லை. ஆனால் மாசேதுங் என்ற அந்த தேசத்தின் சிற்பி தலைமை தாங்கி நடத்திய வீரம் செறிந்த போராட்டம், அவர்கள் வகுத்த சமூதாயக் கொள்கைகள், சமூக விடுதலைக்கான வழிமுறைகள், மக்களின் ஒன்றியமாக அந்த தேசம் வளர்ச்சியடைந்து வந்த வழிகளை படித்து உணர்ந்தவர்களுக்கு நன்கு புரியும்.

ஆனால் காலங்கள் கடந்து செல்ல முன்னவர்கள் வகுத்த பாதைகள் சிதைக்கப்பெற்று, அந்தத் தலைவர்களின் சிந்தனைகள் புதைக்கப்பட்டு தற்போது உலகத்தை அச்சுறுத்தும் ஒரு தந்திரமான தேசம் என்ற நாமத்தோடு வலம் வருகையில் இலங்கை என்னும் ‘குட்டி’யான நாட்டில் பிறந்த ஒரு ‘குட்டி’யை தத்தெடுத்து தன்னை பலப்படுத்திக் கொள்வதற்கான அங்கீகாரம் சில நாட்களுக்கு முன்னர் இந்த குட்டி நாட்டின் அதிகாரம் மிக்க பீடமான பாராளுமன்றத்தில் கிட்டியுள்ளது. இனிமேல் அராஜகத்திற்கான கதவுகள் திறக்கப்பட்டதற்கு சமமான ஒரு தளம் அங்கே போடப்பட்டுள்ளது. கதவுகளின் திறவுகோலும் அவர்களிடம் தரப்பட்டுள்ளது.
இந்த ‘குட்டியை’ தத்தெடுக்கும் முயற்சிக்குரிய அங்கீகாரம் கிடைக்கும் வகையில் பாராளுமன்றத்தில் பலரும் தங்கள் எதிர்ப்புக்களை காட்டியிருந்தார்கள்.

ஒரு பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது, ஆளும் கட்சி அங்கத்தவர்கள் ஆதரித்து கையை உயர்த்துவதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்த்துக் குரல் எழுப்பி கண்டிப்பதும் ஒரு நியதி என்பது போலவே வழமைக்கு மாறாக ஒன்றுமே இடம்பெறாத வகையில் அன்றைய வாக்கெடுப்பும் பாராளுமன்ற உரைகளும் இடம்பெற்றுள்ளன.
குட்டி நாடு ஈன்ற குட்டியை தத்துக் கொடுப்பதை ஆதரித்து உரையாற்றிய நீதி அமைச்சர் சட்டத்திற்கு எதிராகவா பேசப்போகின்றார?. வழமைபோ-ல ஆதரவுக் குரல். ஏதோ ஆதாரங்களை கைகளில் வைத்துப் பேசுவது போன்று ‘எதிர்க்கட்சிகள் இந்த ‘குட்டி’யை தத்துக் கொடுக்கும் நிகழவிற்கு எதிர்ப்பைக் காட்டுவது முட்டாள் தனம் என்று கூட அவர் குறிப்பிட்டுள்ளார் நீதி அமைச்சரான அவர் தீர விசாரிக்காமல் நீதி வழங்கும் நீதிபதி போல சட்டத்தை எதிர்த்து நின்ற எதிர்க்கட்சிகளைப் பார்த்து உரத்துச் சத்தமிட்டார். “இந்தச் சட்டம் எமது தேசத்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் ஒரு திருப்புமுனை என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளுங்கள்” என்று கொக்கரித்தார்.

இன்னொரு பக்கத்தில் எதிர்க்கட்சிகளில் ஒன்றான தமிழ்க்கட்சியைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது உரையில் புதிதாக ஒன்றையும் குறிப்பிடாமல் ‘புராணம்’ பாடினார்.

நீண்டக் காலமாக தமிழர்கள் இழந்த இறைமைக்காகப் போராடி வருகிறார்கள். தமிழர்களோடு இறைமைய பகிர்ந்து வாழ விரும்பாத சிங்களத் தலைவர்கள், மற்றொரு நாட்டுக்கு இந்நாட்டின் நிலத்தை விற்கிறார்கள். இதன் பாரதூரம் விரைவிலேயே வெளிப்படும்.

இந்தக் கூற்று நமது தமிழ் ஆசானுடையது. ஆனால் இவர்கள் முன்னைய ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் பேசும் சிறைக் கைதிகளுக்காகவும் அந்த தளத்தைப் பயன்படுத்தாமல் தங்கள் சொந்த நலம் கண்டு மகிழ்ந்தார்கள். பாராளுமன்றத்தில் மிகவும் மோசமான பிரேரணைகளுக்கே ஆதரவு வழங்கி அந்த பெரும்பான்மைக் கட்சியின் தலைவரைக் காப்பாற்றிய் அணியின் உறுப்பினரே இந்த ஆசான் ஆவார்.
இவ்வாறாக இந்த சட்ட மூலம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் சபையில் எழுந்து நின்ற பின்னர் எதிர்பார்க்கப்பட்ட வகையில் ‘குட்டி’ நாட்டில் பிறந்த அந்த ‘குட்டியை’ தத்துக் கொடுக்கும் தந்திரம் மிகவும் தைரியமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த தந்திரமான நாடு ஏற்னெவே எண்ணற்றவர்களை கொண்டு சென்ற அந்த குட்டி நாட்டில் கும்மாளங்கள் இடம் பெற இனி மேல் கொண்டாட்டம்! கொண்டாட்டம்!!. ஆனால் அந்த ‘குட்டி’ நாடு கரைந்து போய், மக்கள் கரைசேர முடியாமல் தவிக்கும் காலத்தை எப்படித் தாங்குவார்கள் என்றே எம் இதயங்கள் கனக்கின்றன.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

**BASEMENT FOR RENT**
Morningside - Sheppard
சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றில், ஒரு அறை கொண்ட **Basement** வாடகைக்கு உண்டு.
**Separate Entrance** உண்டு. வாகன தரிப்பிடம் ஒன்று வழங்கப்படும். பஸ் வசதிகள் தமிழர் கடைகள் ஆகியன மிக அருகில்.
Tel: 416-425-3713

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு**
ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.
தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.
விபரங்களுக்கு: ஜெயா 647 669 2739
(647) 669-2739

**DZ Driver Wanted**
Looking for DZ driver for GTA & surrounding areas.
Call: NATHAN
(416) 520-1324
Email:
Sentax72@gmail.com

**வேலை வாய்ப்பு**
**முதியவரை (அம்மா) பராமரிப்பு**
ஸ்காபோரோ (மல்வேன்) பகுதியில் வசிக்கும் சக்கர நாற்காலியில் உள்ள அம்மாவை காலை 8:00-12:00, மாலை 4:00-8:00 மணிவரை படுக்கையில் இருந்து எழும்பவும், உதவிகள் செய்து மாலை படுக்கைகு செல்லும் வரை உதவி செய்ய கணவன் மனைவியோ அல்லது இரு பெண்களோ தேவை.
தூக்கி சக்கர நாற்காலியில் அமர்த்த வேண்டும்.
Call: 647-801-6045

**COMPUTER REPAIR**
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

**ROOM FOR RENT**
Kennedy / Eglinton
**2** அறை கொண்ட தொடர்மாடிக் கட்டடத்தில் **(apartment)** இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு.
**NO smoking, alcohol or pets.**
**1 person: $900 / 2 people: $600**
**Available Immediately**
**A1Canada, Rental Services**
**Mr. Ratha Francis:**
(416) 752-4444
Cell: (416) 857-5252

**வேலை வாய்ப்பு**
Looking for Thai food cook.
Restaurant in Scarborough.
Call:
(416) 318-3536

**LOYAL PEST CONTROL**
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.
Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

**RBS BUSINESS CONSULTANCY**
24 JEFFTON CRES, TORONTO, ON, M1G2R5
SERVICES WE PROVIDE: BUSINESS CONSULTING
BUSINESS PLAN WRITING
BUSINESS NAME REGISTRATION
OPEN CORPORATION
HST/ BIN/ PAYROLL NUMBER REGISTRATION
MASTER BUSINESS LICENSE
CORPORATE PROFILE REPORT
CORPORATION REVIVAL
CHANGE CORPORATION INFO
IMPORT/EXPORT BUSINESS REGISTRATION
NUANS SEARCH
PERSONAL TAX
FORM FILL-UP OF ANY KIND INCLUDING IMMIGRATION
ORDER CHEQUES
CALL:
RAMNEET SAMDHYAN
(437) 771-5294
FOR ANY QUESTIONS

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 952 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு வழங்கிய அவுஸ்த்திரேலியா

கொரோனா தொற்றின் தாக்கம் அதிகமாக உள்ள தற்போதைய நாட்களில், கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை பலப்படுத்தும் வகையில் அவுஸ்ரேலிய அரசாங்கம் 952 மில்லியன் பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை இலங்கை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

அதற்கிணங்க அவுஸ்ரேலிய அரசாங்கமானது யுனிசெப் அமைப்பின் ஊடாக ஒட்சிசன் சிலிண்டர் உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

கொழும்பிலுள்ள யுனிசெப் அமைப்பின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் யுனிசெ-ப் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திருமதி எமா ப்ரீகேம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் அவ் உபகரணங்களை உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார். இந்த நிகழ்வில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவி-ட பிரதிநிதி ஹென்னா சிங்கர் ஹெம்டி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

982 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரண தொகுதியில் 291 ஒட்சிசன் சிலிண்டர்கள், 342 ஒட்சிசன் ரெகுலேட்டர்கள், 2490 ஒட்சிசன் முகக் கவசங்கள், 20 தீயணைப்பு உபகரணங்கள் என்பன அடங்குகின்றன.

மேல் மாகாணத்தில் கொரோனா வைரஸ் சிகிச்சை ஆஸ்பத்திரிகள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உபகரணங்களை அன்பளிப்புச் செய்தமைக்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அவுஸ்ரேலிய அரசாங்கத்திற்கும் அந்நாட்டு மக்களுக்கும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நன்றி தெரிவித்தார். இச்செயற்பாடுகளில் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள யுனிசெப் நிறுவனத்திற்கும் அரசாங்கத்தின் சார்பில் சுகாதார அமைச்சர் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.




# ஐ நாவின் அதியுயர் சட்ட ஆணையத்திற்கு மொஹான் பீரிஸைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று ஐநா உறுப்பினர்களை ஐடிஜேபி மற்றும் ஜேடிஎஸ் கோரியுள்ளது



ஐ நாவின் அதியுயர் சட்ட ஆணையத்திற்கு மொஹான் பீரிஸைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று ஐநா உறுப்பினர்களை ஐடிஜேபி மற்றும் ஜேடிஎஸ் கோரியுள்ளது.

இலங்கையில் மஹிந்த ரஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நாட்டின் தலைமை நீதிபதியாக இருந்தவரை, சர்வதேச சட்டங்களை எழுதவுள்ள ஐ நா குழுவுக்கு தேர்தெடுப்பதைத் தடுத்து நிறுத்த உலகளாவிய வேண்டுகோள் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்ட ஆணையத்திற்கான 34 உறுப்பினர்கள் இந்த ஆண்டு நவம்பர் மாதம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று ஐ நா அறிவித்துள்ளது. அவர்கள் எதிர்வரும் 2023 ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஐந்து வருடங்களுக்கு பதவி வகிப்பார்கள். அந்த குழுவிலிருக்கும் 34 உறுப்பினர்களில் எட்டு பேர் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். அந்த எட்டு இடங்களுக்கு பத்து பேர் போட்டியிலுள்ளனர்.

இலங்கை தமது சார்பில் அந்த ஆணையத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட மொஹான் பீரீஸை நியமித்துள்ளது.

அந்த நியமனத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டாம் என்று உலக நாடுகளை உண்மை மற்றும் நீதிக்கான பன்னாட்டுச் செயல்திட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆகியவை கேட்டுக் கொண்டுள்ளன. "சர்வதேச அமைப்புகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைக் குலைப்பதற்கு பெரியளவில் அவர் முயன்றார்" என்று அந்த நியமனத்தை இவ்விரு அமைப்புகளும் சாடியுள்ளன.

நாட்டின் தலைமை சட்ட அதிகாரியாக அவர் செயற்பட்ட காலத்தில், "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டது, கொலை, சித்திரவதை மற்றும் பாலியல் வன்செயல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன்னர் நிறுத்த வேண்டிய அவரது பணியில் தோல்வியடைந்தார்" என்று அந்த அமைப்புகள் கூறுகின்றன.

"ஐ நாவின் சர்வதேச சட்ட ஆணையம் பன்னாட்டுச் சட்டங்களை முறைப்படுத்துகிறது. அண்மையில் அந்த ஆணையம் சட்டவிரோதச் செயல்களைச் செய்பவர்களைப் பாதுகாப்பது, மனித குலத்திற்கு எதிரான குற்றங்க்ளை செய்பவர்களைப் பாதுகாப்பது ஆகியவற்றுக்கு எதிராக சில செயற்பாடுகளை அண்மையில் செய்தது, மேலும் அப்படியான செயல்களில் ஈடுபட்டவர்களை விசாரணைக்காக நாடுகடத்துவது தொடர்பிலும் சில முன்னெடுப்புகளைச் செய்திருந்தது. உலகளவில் சட்டத்தின் ஆட்சி நடைபெற வேண்டும் என்று கருதுபவர்களும் சட்டவாளர்களும் இந்த நபருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று ஐ நா பொதுச் சபையிலுள்ள உறுப்பு நாடுகளை வலியுறுத்த வேண்டும்" என்று ஐடிஜேபியின் செயல் இயக்குநர் யாஸ்மின் சூக்கா கோரியுள்ளார்.

"பீரிஸின் கண்காணிப்பின்கீழ், பாரதூரமான பன்னாட்டுக் குற்றங்களை இலங்கைப் பாதுகாப்பு படையினர் புரிந்தனர் என்றாலும் யாரும் நீதியின் முன்னர் நிறுத்தப்படவில்லை. ஐ நாவுக்கான இலங்கை பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதே திகைக்க வைக்கும் வகையில் இருந்தது. இலங்கை சட்டத்தை மதிப்பதில்லை, நீதி கிடைக்காமல் அல்லாடும் ஆயிரக்கணக்கானவர்களின் முகத்தில் அறைந்தது போல இருந்தது என்று அவரது அந்த நியமனத்திற்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்தன" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மொஹான் பீரிஸ் குறித்து ஜேடிஎஸ் அமைப்பின் ரோஹித பாஷன அபேவர்த்தனவும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

"இலங்கையில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டது, காணாமல் ஆக்கப்பட்டது. கொல்லப்பட்டது, கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டது அல்லது பணிகளைச் செய்தமைக்காக சிறையில் அடைக்கப்பட்டது ஆகியவை நடைபெற்ற போது இவர் தலைமைப் பொறுப்பில் இருந்தார். அவரது செயற்பாடு மற்றும் அவரது அரசு ஆகியவை செய்த தவற்றை மூடி மறைக்க முயன்ற இவரது நியமனத்திற்கு எதிராக உலகம் ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

"அந்தச் செய்தியாளர்கள் இலங்கையில் அரச தரப்பால் முன்னெடுக்கப்பட்ட அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் குறித்து காத்திரமான ஆதாரங்களை வெளியிட்டு பன்னாட்டுச் சட்ட தலையீடு என்று எழுதியவர்கள். உள்நாட்டில் நீதியை மறுத்த அப்படியான ஒரு நபரை சரவதேச சட்டங்கள் குறித்த முடிவு-களை மேற்கொள்ளும் குழுவிற்கு நியமிப்பது ஆட்டுக் குட்டியை ஓநாயிடம் ஒப்படைப்பதற்குச் சமம்" என்றும் பாஷன அபேவர்த்தன மேலும் தெரிவித்தார்.

ஐ நா பொதுச் சபை மொஹான் பீரிஸுக்கு எதிராக ஏன் வாக்களிக்க வேண்டும் என்று ஐடிஜேபி மற்றும் ஜேடிஎஸ் வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கே வாசிக்கலாம்.

இந்தியா செய்திகள்
India News

# ராஜிவ் காந்தி வழக்கு தொடர்பான 7 பேரின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய முதல்வர் ஸ்டாலின்



7 பேர் விடுதலைக்காக இந்திய குடியரசு தலைவருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதமெழுதியுள்ளார்.

அதில், 2018 இல் அமைச்சரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி பேரறிவாளன், நளினி உட்பட 7 பேரை விடுவிக்க கோரிக்கை விடுத்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலினின் கடிதத்தை திமுக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு குடியரசு தலைவர் அலுவலகத்தில் அளித்தார்.



கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் மே 18: தமிழினஅழிப்பு நினைவுநாளில் இணையவழியில் கலந்து கொண்ட ஒன்றாரியோ முதல்வர்



கனடாவில் மே 18 தமிழின அழிப்பு நினைவு நாள் 12வது நிகழ்வில் சமூகவலைத்தளங்கள் ஊடாக பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

தமிழின அழிப்பின் 12ம் ஆண்டு நினைவு நாளான மே 18, 2021 அன்று இலங்கை அரசின் தமிழின அழிப்பிற்கு எதிரான குற்றங்களை அனைத்துலக நீதிவிசாரணை முன் கொண்டுசெல்வோம் எனச் சபதம் எடுத்து கனடியத் தமிழர் தேசிய அவையின் (NCCT) ஒருங்கமைப்பில் கனடியதமிழர் சமூகத்தினால் நடாத்தப்பட்ட தமிழின அழிப்பு நினைவு நாள் நிகழ்வில் ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் உட்பட கனடிய அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாரானுமன்ற உறுப்பினர்கள், மாகாண நாடாளுமன்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர பிதாக்கள், நகரசபை உறுப்பினர்கள், கல்விச்சபை உறுப்பினர்கள் மற்றும் ஐ.நா முன்னாள் உதவி செயலாளர் நாயகம் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அத்துடன் சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பினை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், இம்முறை தமிழின அழிப்பு நினைவு நாள் நிகழ்வு நடைபெற்ற அனைத்து நாடுகளிலும் 18-18-18 (அதாவது 18ம் திகதி 18 மணி 18 வது நிமிடத்தில்) தமிழின அழிப்புக்குள்ளான மக்களுக்கு தீபம் ஏந்தி வழிபாடு செய்யப்பட்டு இறுதி நிகழ்வாக பிரகடனம் வாசிக்கப்பட்டு உறுதி மொழி ஏற்று நிகழ்வு நிறைவு பெற்றது.

பொது சுடர் ஏற்றி, கனடிய தேசிய கீதம், கொடிப்பாடல் அதனைத் தொடர்ந்து ஈகை சுடர் ஏற்றல், அகவணக்கம், மலர்வணக்கம் இடம் பெற்று 18-18-18 மணித்துளிக்கு தீபம் ஏற்றி வழிபாட்டுடன் நிகழ்வு ஆரம்பம் ஆகியது.

தொடர்ந்து ஐ.நா முன்னாள் உதவி செயலாளர் நாயகம் Dr. Denis Halliday அமைச்சர் Mary NG, அமைச்சர் Ahmed Hussen, பாராளுமன்ற உறுப்பினர் Gary Anandasangaree, பாராளுமன்ற உறுப்பினர் Salma Zahid, பாராளுமன்ற உறுப்பினர் Shaun Chen, பாராளமன்ற உறுப்பினர் Mark Holland பாராளமன்ற உறுப்பினர் Arnold Viersen, NDP கட்சியின் தலைவரும் பாராளமன்ற உறுப்பினருமான Jagmeet Singh, பாராளுமன்ற உறுப்பினர் Peter Julian, ஒன்டாரியோ முதல்வர் Doug Ford, ஒன்டாரியோ கல்வி அமைச்சர் Stephen Lecce, ஒன்டாரியோ பாராளமன்ற உறுப்பினர் Vijay Thanigasalam, கனடிய தமிழர் தேசிய அவையின் தலைவர் Professor Sri Ranjan, CTYA உறுப்பினர் Kobina, ஒன்டாரியோ பாராளுமன்ற உறுப்பினர் Logan Kanapathi, ஒன்டாரியோ பாராளுமன்ற உறுப்பினர் Aris Babikian, ஒன்டாரியோ NDP கட்சி தலைவரும் மற்றும் ஒன்டாரியோ பாராளுமன்ற உறுப்பினர் Andrea Horwath, ஒன்டாரியோ பாராளுமன்ற உறுப்பினர் Doly Beggum, டொரோண்டோ நகரபிதா John Tory, பிராம்டன் நகரபிதா Patrick Brown, டொரோண்டோ கவுன்சிலர் Gary Crawford, டொரோண்டோ கவுன்சிலர் Cynthia Lai, பிராம்டன் கவுன்சிலர் Harkirat Singh, கல்விச்சபை உறுப்பினர் Yalini Rajakulasingam, கல்விச்சபை உறுப்பினர் Anu Sriskantharajah, கல்வி சபை உறுப்பினர் Parthi Kanthavel ஆகியோர் தமிழினப்படுகொலைக்களாகிய தமிழினத்திற்கு நீதி கோரி உரையாற்றினார். அதைத்தொடர்ந்து இறுதி நிகழ்வாக பிரகடனம் வாசிக்கப்பட்டு உறுதி மொழி ஏற்று நிகழ்வு நிறைவு பெற்றது.

# ஸ்காபாரோ சுரங்கப் புகையிரத விரிவாக்கத்திற்கான 2.26 பில்லியன் டாலர் முதலீடு செய்வது குறித்து பிரதமர் தலைமையில் கலந்துரையாடப்பெற்றது

கனடியப் பிரதமர், நேற்று முன்தினம் புதன்கிழமை இணையவழி ஊடாக கலந்து கொண்ட ஒரு முக்கிய கலந்துரையாடலில் ரொரன்ரோ பெரும்பாகத்தில் உள்ள பல ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

மேற்படி இணையவழிக் கலந்துரையாடலில், கனடிய அமைச்சரவையின் பொது பாதுகாப்பு மற்றும் அவசரகால தயாரிப்பு அமைச்சர் பில் பிளேர், உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்கள் தொடர்பான அமைச்சர் கேத்தரின் மெக்கென்னா மற்றும் டொராண்டோவின் மேயர் ஜான் டோரி ஆகியோருடன் இணைந்து, ஸ்காபாரோ சுரங்கப்பாதை புகையிரத விரிவாக்கத்திற்கான 2.26 பில்லியன் டாலர் முதலீடு செய்வது உட்பட பொது போக்குவரத்தில் சமீபத்திய கனடிய மத்திய அரசின் நிதி முதலீடு குறித்து பிரதமர் தலைமையில் விவாதிக்கப்பெற்றது.

ஸ்கார்பாரோ சுரங்கப்பாதை அமைப்பு விரிவாக்க திட்டத்தை வரைபடங்கள் மூலம் பார்வையிட்ட பிரதமர் அவர்கள், ஸ்கார்பாரோ சுரங்கப்பாதை விரிவாக்கத்திற்கான மூன்று முன்மொழியப்பட்ட அபிவிருத்தி தொடர்பாக பேசுவதற்கு முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட வண்ணம் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்த வண்ணம் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.



கெனடி நிலையத்திலிருந்து - எம்.பி. ஜான் மெக்கே மற்றும் ஜீன் யிப் ஆகியோரும் லோரன்ஸ் நிலையத்திலிருந்து, எம்.பி. சல்மா ஜாஹித் மற்றும் ஸ்கார்பாரோ சென்றரில் இருந்து - எம்.பி. ஹரி ஆனந்தசங்கரியும் செப்பர்ட் நிலையத்திலிருந்து - எம்.பி. சான் சென் ஆகிய நான்கு எம்பிக்கள் பயனுள்ள கருத்துக்களை இணையவழி ஊடாக பிரதமரோடு பகிர்ந்து கொண்டனர். பிரதமர் அவர்கள் ஒட்டாவா மாநகரலிருந்து மேற்படி இணைய நிகழ்வில் பகிர்ந்து கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



ஸ்கார்பாரோ டவுன் சென்டர் அருகே நின்றவண்ணம் ஸ்கார்பாரோ சுரங்கப்பாதை விரிவாக்க திட்டத்திற்கு நன்றி தெரிவித்த எம்.பி. கேரி ஆனந்தசங்கரி மற்றும் பிரதமர் ஆகியோர் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின் மகத்தான ஆற்றலைப் பற்றி விவாதித்தனர். மத்திய அரசின் நிதியில் 2.26 பில்லியன் டாலர் திட்டம் கட்டமைக்கப்படுவதை உறுதிசெய்து, அடுத்த ஆண்டு விரைவில் திட்டத்தின் பணிகள் தொடங்கப்படும்.

மேற்படி திட்டங்களின் படி ஸ்கார்பாரோ சுரங்கப்பாதை விரிவாக்கத்தில் மூன்று புதிய நிலையங்கள் கட்டப்படவுள்ளன., அவை கென்னடி நிலையத்தில் புளோர்-டான்.்.போர்த், ஷெப்பர்ட் அவென்யூ கிழக்கு வரை, லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட், ஸ்கார்பாரோ சென்டர் மற்றும் செப்பர்ட் அவென்யூ கிழக்கு ஆகிய இடங்களில் முன்மொழியப்பட்ட நிலையங்களைக் கொண்டிருக்கும். 7.8 கிலோமீட்டர் வரை நீடிக்கப்படவுள்ள இந்த திட்டத்தில், ஸ்கார்பாரோவிற்கும் பிற விரைவான போக்குவரத்து அமைப்புகளுக்கும் இடையிலான போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துவதோடு தற்போதைய ஸ்கார்பாரோ விரைவு போக்குவரத்து முறையை மாற்றும், இந்த திட்டமானது 2023 ஆம் ஆண்டில் மக்களுக்கு பயன்தரும் வகையில் நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

# ஸ்காபுறோவில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்திக்கொள்ள பல இடங்களில் வாய்ப்புக்கள்

ஸ்காபுறோ நகரில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனா தடுப்பூசி செலுத்தும் ஏற்பாடுகள் பல இடங்களில் செய்யப்பட்டுள்ளன.

பின்வரும் தகவல்களை ஸ்காபுறோ ரூஜ்பார்க் மாகாண அரசின் தொகுதியின் உறுப்பினர் திரு விஜேய் தணிகாசலம் வெளியிட்டுள்ளார்.

ஸ்காபுறோ சென்டெனியேல் கல்லூரி தடுப்பூசி வழங்கும் நிலையம்:

----------------

12 முதல் 17 வயது வரையான இளையவர்கள் உள்ள ஸ்காபாரோவில் வசிக்கும் (ஆ1 அஞ்சல் குறியீட்டு பிரதேசம்) குடும்பத்தினர் அவர்களுக்கான தடுப்பூசி முன்பதிவினை இப்போது செய்துகொள்ளலாம்.

தடுப்பூசி பெறுவதற்குத் தகுதியான இளையோர் தமது பெற்றோர் / பாதுகாவலர்களுடன் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் வருவதற்கு முன் கட்டாயம் முன்பதிவு செய்திருத்தல் வேண்டும். முன்பதிவினை scarbvaccine.ca என்ற இணையத்தினூடாக செய்துகொள்ளலாம்.

இடம்: Centennial College - Progress Campus
Athletic and Wellness Centre
941 Progress Avenue
காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை

முன்பதிவற்ற உடனடி தடுப்பூசி மையங்கள்:
மே 21 - ரொறன்ரோவில் அதிக நோய்த்தொற்றுள்ள ஆ தபால் குறியீட்டு இலக்கப் பகுதியில் வசிக்கும் அல்லது பணிபுரியும் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசிகள் பின்வரும் இடத்தில் வழங்கப்படும். இதில் அல்பியன் பகுதியிலுள்ள M9V M9W M9R ஆகிய அதிகூடிய தொற்றுள்ள இடங்களில் வசிப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.


இடமும் நேரமும்:
1501 Albion Rd
மே 21, வெள்ளிக்கிழமை பி.ப. 5மணி முதல் இரவு 10மணி வரை

மே 22,
Malvern Christian Assembly (6705 Sheppard Avenue East)
மே 22, சனிக்கிழமை மு.ப. 9மணி முதல் பி.ப. 5மணி வரை

மே 23,
Islamic Foundation of Toronto (441 Nugget Avenue)
மே 23, ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணி முதல் இரவு 8மணி வரை

மே 23,
Lakshmi Narayan Temple (1 Morningview Trail)
மே 23, மு.ப. 10 மணி முதல் இரவு 8 மணி வரை

மே 22 & 23
M3H M3J M3K M6L M9L M9M M9N ஆகிய தபால் குறியீட்டு இலக்கப் பகுதியில் வசிக்கும் அல்லது பணிபுரியும் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி வழங்கல் மே 22-23 சனி-ஞாயிறு தினங்களில் மு.ப. 10 மணி முதல் பி.ப. 4 மணி வரை 2745 Jane Street இல் அமைந்துள்ள St. Jane Frances Church இல் நடைபெறும்.



# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க புலம்பெயர்ந்த தமிழர்கள் பாரிய பங்காற்ற வேண்டும் - யஸ்மின் சூக்கா வேண்டுகோள்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



இலங்கையில் போர்க்காலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கு நியாயம் கிடைக்க சர்வதேச சமூகமும் புலம்பெயர்ந்த மக்களும் மேலும் காத்திரமாகப் பங்காற்ற வேண்டும் என்று உண்மை மற்றும் சமாதானத்திற்கான சர்வதேச செயல்திட்டத்தின் செயல் இயக்குநர் யஸ்மின் சூக்கா காணொளி மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்டிருக்கும் அந்த செய்தியில், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தொடர்ந்து நெருக்கடி மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வேளையில் இந்தப் பாரிய கடமையை புலம்பெயர் தேசத்திலுள்ளவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

ஆண்டுக்கு ஒருமுறை போரில் உயிரிழந்தவர்களை முள்ளிவாய்க்காலில் நினைவுகூர்வதற்கு அரச படைகள் ஏற்படுத்திய தடைகளை மிகவும் வேதனையுடன் சுட்டிக்காட்டிய அவர், பாதிக்கப்பட்டவர்கள் தமது அன்பிற்குரியவர்களுக்காக துக்கம் அனுசரிப்பதை மறுப்பது ஒரு குற்றமாகும் என்றும், அத்தகையச் செயல் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறையைக் காட்டுகின்றன என்றும் தனது செய்தியில் யஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.



இலங்கையில் போர் முடிவடைந்து 12 ஆண்டுகள் ஆன பிறகும் உள்நாட்டில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்ந்து மறுக்கப்படுகிறது அதற்கான வழிமுறைகள் தோல்வியடைந்த நிலையில் அந்தப் பொறுப்பு சர்வதேச சமூகம் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்களின் கைகளில் இப்போது தங்கியுள்ளது என்று அவரது செய்தி குறிப்புணர்த்துகிறது.

புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்பவர்கள் தத்தமது நாடுகளிலுள்ள சட்ட வழிமுறைகள் ஊடாக போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க அனைத்து வழிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்கிறார் யஸ்மின் சூக்கா.

# நினைவேந்தல் நிகழ்வைத் தடுத்து நிறுத்த பொலிசார் பகீரத முயற்சி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்த முல்லைத்தீவு இன்று-திங்கட்கிழமை அனுமதியளித்தது. இன்று நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து தமிழ் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அன்றன் புண்ணியநாதன், நடராஜா காண்டீபன், சுகாஸ் கனகரட்னம் மற்றும் சின்னராசா தனஞ்செயன் தெரிவித்த கருத்துக்களை இங்கு கேட்கலாம்.

இலங்கையில் போர்க் காலத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் விதமாக முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்த பொலிசார் தீவிரமாக முயல்கின்றனர்.

முள்ளிவாய்க்காலில் 18ஆம் திகதி நினைவேந்தலை நடத்துவதற்குத் தடையில்லை என்று முல்லைத் தீவு நீதிமன்றம் திங்கட்கிழமை அறிவித்தது. அதேவேளை பயங்கரவாதத்தைத் தூண்டாத வகையில் சுகாதார நடைமுறைகளை பேணி நினைவேந்தல் நிகழ்வைச் செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இதையடுத்து அங்கு ஏற்பாட்டாளர்கள் சென்ற போது, நீதிமன்ற உத்தரவு தமக்குக் கிடைக்கவில்லை என்று கூறிய பொலிசார் அவர்களை அங்கு அனுமதிக்கவில்லை.

ஆனால் மாலையில் திடீரென்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளிவாய்க்கால் ஆகிய மூன்று பொலிஸ் பிரிவுகளை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக பொலிசார் அறிவித்துள்ளனர். முல்லைத்தீவு பகுதியில் செயற்படும் ஆடைத் தொழிற்சாலையில் 261 பேருக்கு கோவி-19 தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால் அந்த மூன்று பகுதிகளிலும் திங்கட்கிழமை இரவு 11 மணி தொடக்கம் முழு முடக்கம் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில், அந்தத் தொழிற்சாலையில் இவ்வளவு பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது பல சந்தேகங்களை எழுப்புகிறது என்று செயல்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

உலக செய்திகள்
World News

# மே 20 உலக தேனீக்கள் தினமன்று தேனீக்களைப்பற்றி தெரிந்து கொள்வோம்


ரமேஷ், இயற்பியல் உதவி பேராசிரியர்

2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை மே 20 ஐ உலக தேனீ தினமாக நியமித்தது. நவீன தேனீ வளர்ப்பின் முன்னோடியாகக் கருதப்படும் அன்டன் ஜானியா பிறந்த நாள் என்பதால் இந்த தேதி தேர்வு செய்யப்பட்டது. ஸ்லோவேனியாவில் தேனீ வளர்ப்பவர்களின் குடும்பத்தில் இருந்து ஜனியா வந்தார். அங்கு தேனீ வளர்ப்பு ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு முக்கியமான விவசாய நடவடிக்கையாகும். ஸ்லோவேனியா இப்போது ஒரு தேனீ சுற்றுலாத் துறையை உருவாக்கி வருகிறது. நமது உணவில் குறைந்தது 30% மகரந்தச் சேர்க்கைக்கு தேனீக்கள் (அல்லது பிற மகரந்தச் சேர்க்கை பூச்சிகள்) தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தேனீக்கள் இல்லாமல் பாதாம், ஆப்பிள், பேரிக்காய் மற்றும் குயின்ஸ் உருவாகாது. அவகோடா பழம் மற்றும் அனைத்து சிட்ரஸைப் போலவே ஸ்ட்ராபெர்ரி மற்றும் அவுரிநெல்லிகள் போன்ற பல பெர்ரிகளுக்கு மகரந்தச் சேர்க்கைகள் தேவை. பல காய்கறிகள் தேனீக்களைச் சார்ந்தவை. குறிப்பாக வெள்ளரி, பூசணி மற்றும் சீமை சுரைக்காய் போன்ற ஆண் மற்றும் பெண் பூக்கள் கொண்டவை, உணவு பாதுகாப்பு தேனீக்களைப் பொறுத்தது.

சுறுச்சுறுப்புக்கு உதாரணமாக சொல்லப்படும் தேனீக்கள் இயற்கையை சமநிலையாக வைத்துக்கொள்வதிலும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. அவை உற்பத்தி செய்யும் தேனானது பல விதங்களில் சித்த மருத்துவத்தில் மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தேனீக்கள் பெருங்கூட்டமாக வாழ்கின்றன. தேனீக்கள் ஏறக்குறைய ஒரு லட்சம் கிலோ மீட்டர் வரை பயணிக்கும் திறனைக் கொண்டதாகும். தேனீக்கள் மணிக்கு 40 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் பெற்றதாகும். ஏதேனும் புதிய மலர் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை துல்லியமாக ஒரு வித்தியாசமான நடன அசைவின் மூலம் மற்ற தேனீக்களுக்கு தெரிவிக்கின்றன. இராணித் தேனீக்களுடன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு உயிர் விடுவதே ஆண் தேனீக்களின் செயலாகும்.

மலரின் மது தேனீக்களினால் உறிஞ்சி உட்கொள்ளப்பட்டு பின்னர் அவற்றின் வயிற்றிலிருந்து வெளிவருவதுதான் தேன் ஆகும். முட்டையிட்டு சந்ததிப் பெருக்கம் செய்ய இயலாத பெண் தேனீக்களே வேலைக்காரத் தேனீக்கள் ஆகும். இந்த வேலைக்காரத் தேனீக்களால்தான் கூட்டில் இருக்கும் இராணித் தேனீ, குடம்பிகள் மற்றும் ஆண் தேனீக்களுக்கு உணவு அளிக்கப்படுகின்றது. இவற்றின் வயிற்றில் அமைந்த தேன் பைகளினால் மலரின் குளுகோஸ் வேதியியல் மாற்றத்துக்கு உட்பட்டு தேனாக மாற்றப்படுகின்றது. தேனீக்கள் ஒரு முறை எதிரியை கொட்டியவுடன் இறந்து விடுகின்றன. தங்கள் கூட்டைக் காக்கும் போராட்டத்தில் இவை உயிரைத் தியாகம் செய்கின்றன. தேனீயின் கூடு வேலைக்காரத் தேனீக்களின் உள்ளுறுப்புகளில் ஒன்றான மெழுகு சுரப்பியிலிருந்து சுரக்கும் மெழுகைக் கொண்டு கட்டப்படுகின்றது. இதுவே மனிதர்களின் பல பயன்பாட்டிற்கு உதவும் தேன் மெழுகு ஆகும்.

இவற்றின் கூடு பொதுவாக மரங்கள், மலைக் குகை, மனிதர்கள் எளிதில் அடைய முடியாத கட்டிடத்தின் முடுக்கு, பொந்துகள் போன்றவற்றில் கட்டப்பட்டிருக்கும். இவற்றின் கூட்டு அறை மிக சரியாக அறுகோண வடிவத்தில் அமைந்துள்ளது. ஒரு நல்ல ஆரோக்கியமான கூட்டில் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் தேனீக்கள் வரை இருக்கும். தேனீயை சுறுசுறுப்பு, கூட்டு முயற்சி, தலைமைக்கு கட்டுப்படுதல் போன்றவற்றிற்கு உதாரணமாய் கூறுவார்கள். முட்டை இடுவது ஒன்றே அரசித்தேனீயின் முக்கியமான பண்பாகும். அரசித் தேனீ இல்லையென்றால் மற்ற பணிசெய் தேனீகள் மிகவும் குழம்பிப்போய், தமது கட்டுக்கோப்பான சேர்ந்து வாழும் பண்பை இழக்கின்றன. அரசித் தேனீயானது, பணி செய்யாவிட்டாலும், எல்லாத் தேனீக்களையும் ஈர்த்து ஓர் ஒழுங்கில் இருக்க உதவுகின்றது. தாவர இனப்பெருக்கத்தில் தமது பங்கை வழங்குவதுடன், தேனீக்களால் சேகரிக்கப்படும் மேலதிக தேன் மக்களின் பயன்பாட்டுக்கு வருகின்றது. தேனீக்கள் தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு உதவும் மகரந்தச்சேர்க்கையில் முக்கியமான பங்களிப்பை வழங்குவதால், மனிதர்களின் உணவுச் சங்கிலியில் தேனீக்கள் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. அண்மைய காலங்களில் தேனீக்கள் அழிந்துவருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இயற்கைக்கு துரோகம்அளிக்கும் எந்த செயலையும் செய்யாமல் இருப்பதே நல்லது.




உலக தேனீ தினமான இன்று, தேனீக்களின் அவசியம் பற்றியும், மனித குலத்திற்கு அது செய்யும் சேவை பற்றியும் தெரிந்துகொள்ளலாம். ஆண்டுக்கு 1 லட்சம் கி.மீ தூரம் பயணித்து தன்னுடைய உணவுத் தேவைக்காக தேனீ பூக்களில் இருந்து தேனை எடுக்கிறது என்றாலும், அதன் மூலம் அதிகம் பயனடைவது என்னவோ மனிதகுலம்தான். தேன் மூலம், ஒவ்வொரு நாடும், பல கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் ஈட்ட உதவுவதோடு, அது மருத்துவ பொருளாகவும் திகழ்கிறது. பூக்களிலிருந்து தேனை எடுக்கும் நேரத்தில் அவற்றின் காலில் ஒட்டிக்கொள்ளும் மகரந்தம், வெவ்வேறு பூக்களில் மாறி மாறி அமரும்போது, பரவுவதால் மகரந்தச் சேர்க்கை நடக்கிறது. இதனால் பூக்கள் மலர, பூகோளமும் மகிழ்கிறது. அந்த வகையில் தேனீ பசுமையின் பாதுகாவலனாகவும் திகழ்கிறது. இப்படி மனித குலத்தின் நண்பனான தேனீ, தற்போது அழிந்து வரும் உயிரினமாக மாறிவருவதற்கு நாம் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்துகள், செயற்கை உரங்கள், மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் காரணமாகிக்கொண்டிருக்கின்றன.

இப்போது அதிக தொழில்மயமாக்கப்பட்ட விவசாயத்துடன், தேனீக்கள் பன்முகத்தன்மை இல்லாமை மற்றும் அதிக நச்சு இரசாயனங்கள் ஆகியவற்றால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. பல்லுயிர் பற்றாக்குறை என்றால் தேனீக்கள் ஒன்று அல்லது இரண்டு தாவர இனங்களை மட்டுமே நம்பியுள்ளன. மேலும் அந்த பயிர் தோல்வியுற்றால் இது முழு காலனிகளையும் அழிக்கக்கூடும். காலநிலை மாற்றம் என்பது தேனீக்களுக்கு எப்போதும் இருக்கும் அச்சுறுத்தலாகும். வெப்பநிலை அதிகரிக்கும் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் மிகவும் பொதுவானதாக மாறும் போது, தேனீக்கள் பெருகிய முறையில் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றன. நோயால் பாதிக்கப்படுகின்றன, உண்மையில் அவை உயிர்வாழ போராடுகின்றன.

தேனீக்களின் சுறுசுறுப்புக்கு மனிதனாலும் ஈடு கொடுக்க முடியாது. அது சுற்றுச்சூழலுக்கு மட்டுமன்றி மனித வாழ்க்கைக்கும் பேருதவியாக இருக்கிறது. குறிப்பாக விவசயிகளுக்கு இவை செய்யும் உதவி அளப்பரியது. தேனீக்களின் வாழ்க்கை முடிகிறதெனில் உங்களுக்கான அழிவும் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை மறவாதீர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர். பூச்சிக்கொல்லிகளால் நீங்கள் அழிக்க நினைக்கும் பூச்சிகள் இறப்பது மட்டுமன்றி மகரந்தத்தை நுகர வரும் தேனீக்களையும் இறக்க வைக்கிறது. எனவே தோட்டம், விவசாயம் எதுவாயினும் பூச்சிக்கொல்லிக்கு மாற்றாக இயற்கை முறையை உரங்களை கடைபிடிக்கலாம். உதாரணமாக பூண்டு, வெங்காயம், உப்பு, மிளகாய், மிளகு, சோப், சிட்ரஸ் பழங்கள் என இவற்றின் சாறுகளை ஸ்ப்ரே போல் தெளிக்கலாம்.

தேனீக்கள் நுகர்வதற்கு ஏற்ற பூச்செடிகளை வளர்க்க முற்படுங்கள். இதனால் அவை பெருக ஆரம்பிக்கும். தேனீக்களின் வேலையும் இடைவிடாது நடக்கும். வீட்டில் உள்ள அடுத்த தலைமுறைக் குழந்தைகளுக்கு தேனீக்களின் நன்மைகள் குறித்து கற்றுக்கொடுங்கள். அதன் வளர்ப்பு, அதன் தேவையின் முக்கியதுவத்தை உணர்த்துங்கள். இதனால் அவர்களுக்கு அடுத்த தலைமுறையும் இதைக் கற்றுக்கொண்டு வளர்க்க, பாதுகாக்க முன்வருவார்கள். பல இடங்களில் தேனீக்கள் கூடு கட்ட அதற்கு ஏற்ற சூழலை அமைத்துத் தருகின்றார்கள். அப்படி நீங்களும் தேனீக்கள் சூழ உதவுங்கள். இதற்காக உலகம் முழுவதும் பல அமைப்புகள், குழுக்கள் இருக்கின்றன. நீங்களும் குழு அமைத்து தேனீக்களை பாதுகாக்கலாம். அதனால் நன்மையும் அடையலாம்.

கனடிய செய்திகள்
Canadian News

# அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பெற்றவர்கள் தாங்கள் இரண்டாவது தடவை செல்வது பற்றி கவலைப்படத் தேவையில்லை என்கிறார் மருந்துகள் ஆராய்ச்சி நிபுணர் கெல்லி

அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பெற்றவர்கள் தாங்கள் இரண்டாவது தடவைக்குச் செல்வது பற்றி கவலைப்படக்கூடாது, காரணம், இந்த தடுப்பூசி பெற்றவர்கள் நேரம் வரும்போது அவர்கள் உடல் நலத்தைப் பொறுத்தளவில் நல்ல நிலையில் இருக்க வாய்ப்புக்கள் அதிகம் என்றும் சிலர் பரப்பும் வதந்திகளைப் போன்று இந்த அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பாதிப்புக்களைத் தரவல்லது அல்ல என கனடாவின் வாட்டர்லூ பல்கலைக் கழகத்தில் உள்ள மருந்தியல் நிபுணர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

வாட்டர்லூ பல்கலைக்கழக பேராசிரியரும் மருந்து தயாரிப்பு துறையின் விஞ்ஞானிகளில் ஒருவருமான கெல்லி கிரைண்ட்ரோட் கூறுகையில், "உங்களுக்கு ஏதேனும் ஒரு ஊசி வழங்கப்படும், உங்களுக்கு ஒரு தேர்வு இருக்கலாம்.




முதல் தடவை அஸ்ட்ராசெனெகாவைப் பெற்றவர்கள் அந்த தடுப்பூசியை மீண்டும் இரண்டாவது முறையாக எடுக்கலாம் அல்லது அதற்கு பதிலாக ஃபைசர் அல்லது மாடர்னாவிற்கு மாற முடியும் என்றும் கிரைண்ட்ரோட் கூறினார்.

கொரோனா தடுப்பூசிகள் தொடர்பாக பரப்பப்படும் வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாக தான் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பலனாக இந்த விடயத்தை தான் வெளியில் பரப்புவதற்கு முனைவதாகவும் அவர் கூறியுள்ளார்.



அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் "தடுப்பூசிகளைக் கலப்பது சாதாரணமானது அல்ல, ஏற்கனவே ஹெபடைடிஸ், சிங்கிள்ஸ் மற்றும் நிமோனியா ஆகியவற்றுக்கு ஏற்கனவே நடக்கிறது.

"இது மிகவும் அசாதாரணமானது அல்ல". "நாங்கள் அதை மற்ற சூழ்நிலைகளில் செய்கிறோம்." என்றார்.

தடுப்பூசியுடன் இணைக்கப்பட்ட ஒரு அரிய இரத்த உறைவு நிலை குறித்த அறிக்கைகள் அதிகரித்ததன் காரணமாக, குறிப்பாக முதல் டோஸ் காரணமாக அஸ்ட்ராசெனெகாவின் முதல் அளவு இடைநிறுத்தப்படுவதாக மாகாணம் செவ்வாயன்று அறிவித்தது. ஃபைசர் மற்றும் மாடர்னா எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசிகளின் அதிகரித்த மற்றும் நம்பகமான வழங்கல் மற்றும் கோவிட்-19 தொற்றாளர்களில் குறைவு ஆகியவற்றின் அடிப்படையிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

"வல்லுநர்கள் குறிப்பாக இரண்டாவது தடுப்பூசி போடுவது பற்றி கவலைப்படவில்லை" என்று கிரைண்ட்ரோட் கூறினார்.

அஸ்ட்ராசெனெகா போன்ற வைரஸ்-திசையன் தடுப்பூசிகளுடன் ஃபைசர் மற்றும் மாடர்னாவை கலந்து பொருத்துவதன் சாத்தியமான நன்மை உட்பட, கோவிட்-19 தடுப்பூசிகளை பரிமாறிக்கொள்வதைப் பார்க்கும் புதிய ஆய்வில் இருந்து விரைவில் எதிர்பார்க்கப்படும் முடிவுகளுக்கு அவர்கள் காத்திருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஒன்றாரியோ மாகாணத்தில் குடிவரவு அமைச்சின் சேவைகள் அனைத்தும் தொழில் அமைச்சிற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன

## குடிவரவு ஆலோசகர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யவும் தனியான பிரிவு நிறுவப்பட்டுள்ளது



ஒன்றாரியோ மாகாணத்தில் குடியேறி இங்கு பணியாற்ற விரும்பும் வெளிநாட்டவர்களை இங்கு அழைக்க விரும்பும் கனடிய வேலை வழங்குவோரின் விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்யும் பொறுப்பை தற்போது ஒன்றாரியோவின் தொழில் அமைச்சு ஏற்றுள்ளது. மேலும் ஒன்றாரியோவின் பொருளாதாரத்தை அதிகரிக்கத் தேவை-யான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டவர்களிடமிருந்து வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகளை கவனிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும். இவ்வாறாக வெளிநாட்டு தொழில் வல்லுனர்களை ஒன்றாரியோவிற்கு அழைக்கும் போது, அதில் சம்பந்தப்படும் குடிவரவு ஆலோசகர்களைக் கண்காணிக்குவும் ஒரு தனியான பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார், ஒன்றாரியோ மாகாணத்தின் தொழில் அமைச்சர் **Mc-Naughton.** நேற்று மாலை ஒன்றாரியோவில் உள்ள பல்லின பத்திரிகையாளர்களை இணையவழி ஊடாக சந்தித்து கலந்துரையாடி பின்னர் அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாடுகையில்

"ஒன்றாரியோ மாகாணத்தில் தொழில் வல்லுனர்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே உள் நாட்டில் அவ்வாறானவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை தகுதியுள்ளவர்களாக கொண்டு வருவதோடு, எங்கள் மாகாணத்தில் உடனடியாக தேவையாக உள்ள எண்ணிக்கைக்கு ஏற்ப வெளிநாடுகளிலிருந்து அழைக்க வேலை வழங்கும் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். ஒன்றாரியோ குடிவரவாளர் பரிந்துரைக்கும் திட்டத்தின் **(OINP ),** என்னும் திட்டத்தின் படி ஒன்றாரியோவில் பணியாற்றக் கூடிய தகுதி வாய்ந்தவை வேலை வழங்கக் கூடிய நிறுவனங்கள் அல்லது முதலாளிகள் அழைக்க விரும்பும் போது, இங்குள்ள குடிவரவு ஆலோசகர்கள் தங்கள் பணிகளில் ஏதாவது மோசடி செய்கின்றார்களா என்பதையும் நாம் கவனிக்கவுள்ளோம். அதற்காக மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

எனினும் எவ்வளவு விரைவாக தொழில் வல்லுனர்களை இங்கு அழைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நாம் அழைக்க முயல்வோம். அதற்காகவே எமது தொழில் அமைச்சோடு குடிவரவு தொடர்பான சேவைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து குடிவரவு தொழிலமைச்சு தொடர்பான பரிசோதனைகள் ஆகியவற்றை விரைவாகச் செய்ய இயலும்" என்றார்

மேற்படி சந்திப்பில் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களான **Deepak Anand** மற்றும் **Sheref Sabawy** ஆகியோரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கீழக்காணும் சில சட்ட மாற்றங்களையும் அமைச்சர் நேற்றைய தினம் அறிவித்தார்

ஒன்றாரியோவின் தொழிலாளர் விவகாரங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சு, ஒன்ராறியோ குடிவரவு சட்டம், 2015 (சட்டம்) திருத்த சட்டத்தின் இணக்க அதிகாரம் மற்றும் ஒன்றாரியோ குடிவரவாளர் பரிந்துரைக்கும் திட்டத்தின் **(OINP)** செயல்திறனை மேம்படுத்த ஒப்புதல் கோருகிறது. இந்தத் திருத்தங்களை தவறாக சித்தரித்தல் மற்றும் மோசடி சம்பவங்களிலிருந்து பாதுகாப்பதற்கும், முடிந்தவரை திறமையாக செயற்படுத்தவும் தீர்ப்பதற்கான திட்டத்தின் திறனை மேம்படுத்தும். பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே பரிந்துரைக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான திட்டத்தின் கடமையை சரியாகச் செய்வதற்கும் இந்த திருத்தங்கள் பயன்படும். ஒன்றாரியோவில் குடியேறி பணியாற்றுவதற்கு வேலை வழங்குவோரிடமிருந்தோ அன்றி விண்ணப்பதாரர்களிடமிருந்தோ நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து தகவல்களை கட்டாயப்படுத்த சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இயக்குநரின் அதிகாரத்தை விரிவுபடுத்துதல் கனடிய குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தில் செய்யப்படும் உள்ள மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் சட்டத்தில் ஒரு முக்கியமான குறிப்பைப் புதுப்பித்தல், இதன் மூலம் இங்குள்ள குடிவரவு ஆலோசகர்களைத் தொடர்ந்து கட்டுப்படுத்தக் கூடிய வகையில் செயலாற்ற ஏதுவாக இருக்கும்.



## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இல்லத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு

முள்ளிவாய்க்காலில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப்பலம் முறியடிக்கப்பட்டு படைக்கலன்கள் மூச்சிழந்த பின்னர் தமிழ் மக்களிடம் இன்று எஞ்சியிருக்கும் வலிமையான ஆயுதங்கள் கண்ணீரும் நினைவுகளும் மட்டும்தான். நாம் வாழ்ந்ததையும் வீழ்ந்ததையும் வரலாறாக வருங்காலத் தலைமுறைகளிடம் கையளிப்போம் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கப்பட்ட நிலையில் எங்கள் எல்லோரது வீட்டு முற்றங்களும் முள்ளிவாய்க்கால் முற்றங்கள் ஆகட்டும்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் அவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியபோது எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு.





# மகிந்த இராஜபக்ச போலவே கோத்தாபாய இராஜபக்ச அரசாங்கமும் சீனாவின் பக்கம் சாய்ந்தே பயணிக்கின்றது என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி



மகிந்த இராஜபக்ச அரசாங்கம் போலவே கோத்தாபாய இராஜபக்ச அரசாங்கமும் சீனாவின் பக்கம் சாய்ந்தே பயணிக்கின்றது. அவர்கள் சீனாவின் பக்கம் வலுவாகச் சார்ந்தவர்களாக இருப்பதனால், இந்த நாட்டின் பொருண்மியத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நல்ல செயற்திட்டங்களை இந்த நாட்டின் அமைவிடம் காரணமாகவுள்ள புவிசார் அரசியல் நலன்களை வைத்து சீனாவிற்கு சாதகமாக சமரசத்திற்கு உட்படுத்துகிற பணியிலேயே ஈடுபடுகின்றனர்.

என தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இவ்வாறு நாடாளுமன்றத்தில் துறைமுகநகர சட்டமூலம் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பெரும்பாலான எதிர்கட்சி உறுப்பினர்களைப்போலன்றி நாம் இச்சட்டமூலத்தை வேறு விதமாகவே அணுகுகிறோம். எங்களது பார்வையில் ஒரு சிறியநாடாகவுள்ள இலங்கை சர்வதேசஅளவிலான பொருண்மியப் போட்டிகளை எதிர்கொள்வதானால் புதுமையான வழிமுறைகளைக் கண்டறிவதுபற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பெருந்தொற்று காரணமாக உலகளவில் பொருண்மிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிற நிலையில், பொருண்மியப் போட்டியை எதிர்கொள்வதற்கு இலங்கை அதிகளவில் செயற்பட வேண்டியுள்ளது. அந்தவகையில் பார்க்கிறபோது, சிறப்பு பொருண்மிய வலயங்களை அல்லது வேறேதாவது பெயரில் அழைக்கப்பட்டாலும் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வது பற்றிச் சிந்திப்பதற்கு அல்லது இத்தகைய புதுமையான அணுகுமுறைகளை கையாள்வதற்கும், அதற்கான செயற்படு வெளியினை உருவாக்குவதற்கும் அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவருவதனையோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டிய சட்ட மூலங்களைக் கொண்டுவருவதனையோ ஏன் ஒப்பங்கோடல் முறையிலான பொது வாக்கெடுப்புக்குச் செல்வதனையோ தவறெனக் கூறமுடியாது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பானது எழுபத்திமூன்று வருடங்கள் பழமையானது, இப்போதிருக்கும் அரசியலமைப்பில் நீங்கள் இருபது முறை திருத்தங்களைச் செய்துள்ளீர்கள். பிரச்சனை அதிகரித்துச் செல்கிறது. நாட்டிற்குள் பிளவுகள் அதிகரித்துச் செல்கின்றன. இனங்களுக்கிடையில் பிளவுகள் அதிகரித்துச் செல்கின்றன. இது செயற்பாட்டுக்கு உதவாத அரசியலமைப்பாக மாறிவிட்டது. தனித்து இனத்துவ உணர்வுகளின் அடிப்படையிலேயே இன்றும் இது நடைமுறையிலிருக்கிறது. அதிகாரத்தை இவ்வாறு மத்தியில் குவிப்பதில் எதுவித அர்த்தமுமில்லை. தமிழ்மக்களிற்கு தன்னாட்சி வழங்குவதற்கான இடைக்கால ஏற்பாட்டைக்கூட எதிர்த்தவர்கள்தான் இன்று நாட்டின் இறைமையை சமரசத்திற்கு உள்ளாக்குகிறார்கள். இது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லையா? என்றும் கஜேந்திரகுமார் எம்பி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அந்த வகையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்குவகையில் தனி அலகாக துறைமுக நகரத்தை உருவாக்குவது, தொழில் வாய்ப்புகள், தொழிற்பயிற்சிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் பொருண்மிய மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்கு அதனை பரிசீலிப்பது போன்றவை தவறான அணுகுமுறை எனக் கூறமுடியாது. இவ்விடயங்களில் நாட்டின் ஏனைய பகுதிகள் தோல்வியடைந்துள்ள நிலையில் அதன் அவசியத்தை உணரக்கூடியதாக இருக்கிறது. நாங்கள் இச்சட்டமூலத்தை எதிர்க்கிறோம். பொருண்மிய மேம்பாட்டை ஏற்படுத்துவதான் இங்கு முதன்மையான விடயமாக இருப்பின் அக்குறிக்கோளில் எதுவித தவறும் இல்லை. அதற்காக நாம் இச்சட்டமூலத்தை எதிரக்கவில்லை.

சில காலமாக எமது அரசியல் கட்சியானது இந்த ஒற்றையாட்சி அரசியலமைப்பு செயற்படமுடியாதவாறு முடக்கமடைந்து விட்டதாக கூறிவருகிறது. இன்றைய யுகத்திற்கு இது பொருந்தாது எனவும் நாம் கூறிவருகிறோம். நாட்டின் இறைமை என அரசாங்கமும் ஏன் எதிர்க்கட்சியும் கூறிவருவதனை நாம் ஏற்கவில்லை. முதன்மையான எதிர்கட்சியானது இந்த விடயத்தில் அரசாங்கத்தை விஞ்சுகிறபடி பேசிவருகிறது. இறைமை என்ற அடிப்படையில் நீங்கள் கடைப்பிடித்து வருவது காலவதியாகிவிட்ட கருதுகோள். உலக பொருளாதார விடயத்தில் ஒரு தரப்பாக இருக்க விரும்பும் நீங்கள் உள்நாட்டில் இவ்வாறு நடந்துகொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பாக புதிதாகச் சிந்திக்க வேண்டும். இவ்வரசியல் யாப்பு தொடர்பாக புதிதாச் சிந்திக்க வேண்டும்.

இந்த யுகத்திற்கு ஏற்றவிதத்தில் அரசியலமைப்பில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த எத்தனிப்பதனை நாங்கள் வரவேற்போம். ஆகவே இச்சட்டமூலம் கொண்டுவருவது தொடர்பாக அரசாங்கம் உத்தியோகபூர்வமான முறையில் குறிப்பிடுகின்ற விடயங்களுக்காக நாங்கள் இச்சட்டமூலத்தை எதிர்க்கவில்லை என்பதனை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

உண்மை என்னவென்றால், இன்றைய உலகில், இலவசமாக யாரும் மதிய உணவினை வழங்குவதில்லை. முன்னைய மகிந்த இராஜபக்சவின் அரசாங்கத்தினைப்போலவே இந்த அரசாங்கமும், பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து வெளியியேறிய பின்னர் இருந்துவரும் புவிசார் அரசியல் சமநிலையை குழப்புவதனையே தமது குறிக்கோளாக் கொண்டிருக்கும் முக்கிய தரப்பாக இருந்துவருகிறது.

ஜேஆர் ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தில், அவர் ஐக்கிய அமெரிக்காவின் பக்கம் சார்ந்து செயற்பட்டபோது இதுபோன்ற புவிசார் அரசியல் போட்டி ஏற்பட்டது. இலங்கை மேலும்மேலும் ஐக்கிய அமெரிக்காவின் பக்கம் சரியாமல் தடுப்பதற்கு எமது அண்டைநாடான இந்தியா ஆயுதப்போராட்டத்தை ஆதரிக்கும் சென்றது. பனிப்போர் காலத்தில், இலங்கை அமெரிக்க சார்பாக சென்றுவிடாமல் தடுப்பதற்கு தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தை இந்தியா தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியது. அதுவே உண்மை நிலவரம். இன்று இப்பிராந்தியத்தில் காணப்படும் வலுச்சமநிலையை தன்பக்கத்திற்குச் சார்பாகத் திருப்ப முனையும் ஒரு தரப்பான சீனாவை இந்த நாட்டிற்குள் கொண்டுவந்திருக்கிறீர்கள்.

புவிசார் அரசியலை மையப்படுத்திய உங்களது களியாட்ட நடவடிக்கைகளால் தமிழர் தேசமே அதிகம் பாதிக்கப்பட்டது. உங்களுடைய புவிசார் அரசியல் நலவசயயபயணை ஆல் தமிழர்தேசமே பாதிக்கப்பட்டது. இவ்வாறான நிலமை திரும்பவும் ஏற்படுவதனை நாங்கள் விரும்பவில்லை. ஆகவே இவ்விடயத்தில் ஒரு தரப்பாக இருப்பதனை நாங்கள் விரும்பவில்லை. அதன் காரணமாகவே நாங்கள் இச்சட்மூலத்தை எதிர்க்கிறோம்.

இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்விரும்புகிறேன். இதுதான் இங்குள்ள சோகநிலை, இதுதான் இனவாதம், இந்த அவையிலுள்ள பெருமபாலான உறுப்பினர்கள் இதனையே விரும்புகிறார்கள்.

அமைதிப் பேச்சுவார்த்தை உச்சநிலையில் இருந்தபோது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு நிலப்பரப்பை அதன் கட்டுபாட்டுக்குள் வைத்திருந்தபோது, மேற்கொண்டு பேச்சுவார்த்தையை தொடரும் வகையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய யோசனை முன்வைகைக்கப்பட்டது. அப்போதைய அரசாங்கம் கூட்டாட்சி முறையைக் கொண்டுவருவதுபற்றிச் சிந்திப்பதாக உத்தியோகபூர்வமான முறையில் அறிவித்திருந்திருந்தது.

இந்தகைய புறச்சூழலிற்தான் விடுதலைப்புலிகள் இவ்வாலோசனையினை முன்வைத்திருந்தனர். ஆனால் அதனை நீங்கள் நிராகரித்திருந்தீர்கள். ஒரு இடைக்கால ஏற்பாட்டினைக்கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்மக்கள் ஏதோ ஒருவகையில் தன்னாட்சி அலகினைப் பெற்றுக்கொள்வதனை தடுப்பதற்கு இனவழிப்புச் செய்வதனை தேரந்தெடுத்தீர்கள. ஆனால் இன்றைக்கு வேறுகாரணங்களுக்காக அதுபோன்ற ஒரு அலகினை உருவாக்குவது தொடர்பில் உங்களிடம் எதுவித தயக்கமும் காணப்படவில்லை.

புவிசார் அரசியலில் போட்டித்தரப்புகளில் ஒரு தரப்பினர் மேலாதிக்கம் பெறுவதற்கு வழிவகை செய்யும் வகையில் இதனை மேற்கொள்கிறீர்கள். இதுதான் இந்த அவையின் இனவாதம். இதன்காரணமாகவே நாங்கள் இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கிறோம். இந்த பாதகமான நிலமையை சிங்கமக்கள் காலங்கள் கடந்து செல்லும் போது உணர்ந்துகொள்வார்கள். ஆனால் அப்போது அவர்களில் பலர் செயலிழந்தவர்களாக மாறிவிடுவார்கள்" என்றார் கஜேந்திரகுமார் எம்.பி.

வாஷிங்டன் (ஆபி) - ஆசிய அமெரிக்கர்கள் மற்றும் பசிபிக் தீவுவாசிகளுக்கு எதிரான வெறுப்புக் குற்றங்கள் வியத்தகு முறையில் அதிகரிப்பதைக் குறைப்பதற்கான சட்டத்தில் ஜனாதிபதி ஜோ பிடன் வியாழக்கிழமை கையெழுத்திட்டார், மேலும் வேறு எதற்கும் உடன்படுவதாகத் தோன்றும் சட்டமியற்றுபவர்கள் வெறுப்புக்கும் இனவெறிக்கும் எதிராக ஒன்றிணைந்தார்கள் என்று பெருமிதம் தெரிவித்தனர்.

இந்த மசோதாவை தோல்வியுற்ற ஓரங்கள் மூலம் ஒப்புதல் அளித்து, தனது கையொப்பத்திற்காக வெள்ளை மாளிகைக்கு அனுப்பியதற்காக ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் பிடென் பாராட்டு தெரிவித்தார். மசோதா கையெழுத்திடும் விழாவில் பல டஜன் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர், இது தொற்றுநோய்களின் போது பிடன் வெள்ளை மாளிகைக்கு வருகை தரும் மிகப்பெரிய குழுக்களில் ஒன்றாகும்.

ஏப்ரல் மாதம் செனட் 94-1 வாக்களித்ததைத் தொடர்ந்து, இந்த வாரம் 364-62 மசோதாவுக்கு சபை ஒப்புதல் அளித்தது.

பதவிக்கு பிரச்சாரம் செய்தபோது நாட்டை ஒன்றிணைக்க உதவ வேண்டும் என்ற தனது விருப்பத்தை வலியுறுத்திய பிடென், கிழக்கு அறை நிகழ்வின் போது வெறுப்பு மற்றும் இனவெறிக்கு எதிராக போராடுவது மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று கூறினார்.

"நான் இன்று அமெரிக்காவில் பெருமைப்படுகிறேன்," என்று அவர் கூறினார்.

புதிய சட்டம் முயற்சிக்கு பொறுப்பான ஒரு அதிகாரியை நியமிப்பதன் மூலம் வெறுப்புக் குற்றங்கள் குறித்த நீதித் துறையின் மதிப்பாய்வுகளை துரிதப்படுத்தும். உள்ளூர் சட்ட அமலாக்க முகவர் நிறுவனங்கள் தங்கள் விசாரணை, அடையாளம் காணல் மற்றும் சார்பு-உந்துதல் சம்பவங்களை அறிக்கையிடல் ஆகியவற்றை மேம்படுத்த பெடரல் மானியங்கள் கிடைக்கும், அவை பெரும்பாலும் குறைவாகவே அறிக்கையிடப்படுகின்றன.

சில செயல்பாட்டாளர்கள் சட்டத்தை அமலாக்கத்தை நம்புவதை எதிர்த்தனர்.

கறுப்பு மற்றும் இந்தியரான பிடென் மற்றும் துணைத் தலைவர் கமலா ஹாரிஸ், ஆசிய அமெரிக்க மற்றும் பசிபிக் தீவு தனிநபர்கள் மற்றும் அவர்களது வணிகங்களுக்கு எதிரான குத்தல், துப்பாக்கிச் சூடு மற்றும் பிற தாக்குதல்கள் பற்றிய அறிக்கைகள் பற்றி ஒரு வருடம் முன்பு தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து விவாதித்தனர்.

அந்த நேரத்தில் இதுபோன்ற சம்பவங்கள் ஆறு மடங்கு அதிகரித்துள்ளதாக ஹாரிஸ் கூறினார்.

புதிய சட்டம் யு.எஸ். வெறுப்பை நிறுத்துவதற்கு நெருக்கமாக கொண்டுவருகையில், "அநீதியை நிவர்த்தி செய்வதற்கான வேலை, அது எங்கிருந்தாலும், அது முன்னோக்கி இருக்கும் வேலையாக உள்ளது" என்று அவர் கூறினார்.

மசோதாவில் கையெழுத்திடும் காட்சி தொற்றுநோய்க்கு முந்தைய காலங்களை நினைவூட்டுவதாக இருந்தது, மேலும் இந்த மசோதா ஒரு காங்கிரசில் இரு கட்சிகள் ஒரு விரைவான தருணத்தைக் குறித்தது, இது COVID-19 உதவி முதல் "உள்கட்டமைப்பு" வரையறை வரையிலான பிரச்சினைகள் குறித்து பக்கச்சார்பற்ற கட்டமைப்பைக் கடக்க ஆண்டு முழுவதும் போராடியது.

ஹவுஸ் சபாநாயகர் நான்சி பெலோசி, டி-கலி.ஃப், மற்றும் காங்கிரஸ், நீதித்துறை மற்றும் வக்கீல் குழுக்களில் இருந்து 60க்கும் மேற்பட்ட விருந்தினர்கள், வெள்ளை மாளிகையின் உதவியாளர்களுடன், சுதந்திரமாக ஒன்றிணைந்து, புதிய பொது சுகாதார வழிகாட்டுதலின் காரணமாக மக்கள் COVID-19 க்கு எதிராக தடுப்பூசி போட்டனர். முழு தடுப்பூசி போட்ட மற்றவர்களுடன் வீட்டுக்குள் இருக்கும்போது முகமூடி அணிவதை நிறுத்தலாம்.

மைனே சென். சூசன் காலின்ஸ் மட்டுமே குடியரசுக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பார்வையாளர்களில் காணப்பட்டார்.

நிகழ்ச்சியின் முடிவில், மசோதாவை நிறைவேற்றுவதற்கான முயற்சியை வழிநடத்திய சட்டமியற்றுபவர்கள் பிடனை ஒரு மேசையில் உட்கார்ந்து சட்டத்தில் கையெழுத்திட்டபோது அவரைச் சூழ்ந்தனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# கோவிட் – 19 தொற்று எண்ணிக்கை தணிந்து சென்றால் ஒன்றாரியோ பாடசாலைகள் மீண்டும் ஜூ ன் மாதத்தில் திறக்கப்படுமா?



ஒன்றாறியோ மாகாணத்தில் இயங்கும் பாடசாலைகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் மீண்டும் திறக்கப்படலாம் என்ற தகவல் எமது ஆசிரி-ய பீடத்திற்கு கிடைத்துள்ளது. ஆனால் இந்த மாற்றம் எதிர்வரும் நாட்களில் கோவிட்-19 தொற்று எண்ணிக்கையை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படும் என்றும், தொற்று எண்ணிக்கை குறைந்து 'சமாளிக்கக் கூடிய' எண்ணிக்கை அமையுமானால் அவ்வாறு பாடசாலை-கள் மீண்டும் திறக்கும் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறியப்படுகின்றது.

அவ்வாறு, மாகாணத்தின் அனைத்துப் பகுதியிலும் கோவிட்-10 தொற்று ஒரே அளவில் குறையாவிட்டால், எண்ணிக்கை தொற்று எண்ணிக்கை குறைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மாத்திரம் திறப்பதனை யோசிக்கலாம் என்று "ஒன்றாரியோ மாகாண விஞ்ஞானிகளின் பீடம்" தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் சகிதம் கல்வித்துறை சார் நிபுணர்களைச் சந்தித்து மாகாண முதல்வர் பாடசாலைகளை மீளவும் திறப்பது தொடர்பான தனது விருப்பத்தை வெளிப்படையாகச் சொன்னார்.

பாடசாலைகளில் இறுதி மாதத்தில் மாணவர்கள் நேரில் வந்த வகுப்பறைக் கல்வியைப் பெறுவத குறித்து ஒன்றாரியோ மாகாணத்தின் மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களிலிருந்து ஒருமித்த கருத்தை மீண்டும் தான் அறிந்த கொள்ள விரும்புகின்றார் எனவும், ஆனால் கோவிட்-19 எண்ணிக்கைகளில் அதிகரிப்பு ஏற்பட்டால் அதை எங்களால் தீர்மானிக்க முடியாது" என்றும் கூறினார்.

மாகாண முதல்வர் தொடர்ந்து கூறுகையில் "அதிக எண்ணிக்கையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பற்றியும் அவர்களது கல்வி பாதிக்கப்படுவது பற்றியும் கவலைப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரி-யும், ஆனால் உண்மையும் இருக்கிறது. ஆனால் நோய்த் தொற்றானது அதிகரித்தால் அதற்கு சாத்தியமில்லை.

எவ்வாறாயினும், எமது மாணவர்களை நான் திரும்பவும் பாடசாலைகளில் காணவே விரும்புகிறேன்" மேலும் 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வய-துடைய மாணவர்கள் தற்போது தடுப்பூசிகளைப் பெறுகிறார்கள். எனினும் நானும் எனது அரசாங்கமும் இந்த விடயத்தில் அவசரப்படவில்லை என்றும் ஒன்றாரியோ முதல்வர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் மாகாண முதல்வரின் கருத்துக்ளுக்கு பதிலளித்த கனேடிய குழந்தை நலச் சங்கம், மற்றும் உடல்நலம் குன்றிய குழந்தைகளின் வைத்தியசாலை மற்றும் பிற முக்கிய மருத்துவ நிபுணர்களின் சம்மேளனம் ஆகியவற்றின் கருத்துக்களின் படி மாணவர்கள் தொற்றுநோயின் போது மிகுந்த பாதிப்பை சந்தித்துள்ளனர் என்றும், எனவே பாடசாலைகளை உடனடியாக மீண்டும் திறக்குமாறு மாகாணத்தை மீண்டும் வலியுறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்கள்

இந்த விடயம் தொடர்பாக ஒன்றாரியோ மாகாணத்தின் புதிய ஜனநா-யகக் கட்சியின் எம்.பி.பியும் கட்சியின் கல்வி தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பான விமர்சகருமான மரிட் ஸ்டைல்ஸ், பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக கருத்துத்துக்களை பகிர்ந்து கொண்ட போது "மாணவர்களும் அவர்களது குடும்பங்களும் இன்னும் ஐந்து வாரங்களுக்குப் சலித்தவர்களாக மாறிவிட்டார்கள். அவசரகால இணையவழி ஊடாக கற்றல் முறை காரணமாக பல மாணவர்கள், தங்கள் இனிய நண்பர்களையும், அன்பான ஆசிரியர்களையும் தவறவிட்டுள்ளார்கள் எனவேதான் அவர்கள் பாடசாலைகளுக்கு நேரில் சென்று கற்க விரும்புகிறார்கள். என்றார்.

# பலஸ்தீன மக்களுக்கு எதிரான கொரூர தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை முஸ்லிம்கள் சார்பாக கவலை தெரிவித்த அன்பர்கள்



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவி-ன் பொதுச் செயலா-ளர் எம். அர்கம் நூராமி-த் மற்றும் அதன் உதவிப் பொதுச் செயலாளர் எம்.எஸ். எம் தாஸீம் ஆகியோர் கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்திற்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் செய்து பலஸ்தீன மக்களுக்கு எதிராக நடைபெறும் அநியாயங்கள் தொடர்பில் இலங்கை முஸ்லிம்கள் மற்றும் பொதுமக்கள் சார்பாக தங்களது கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்தனர். இச்சந்திப்பின்போது பலஸ்தீன மக்களுக்கு தங்களது ஆதரவை தெரிவிக்கும் வகையில் ஆவணம் ஒன்றும் பலஸ்தீன தூதரகத்திற்கு வழங்கப்பட்டது.

இங்கே காணப்படும் படம் அங்கு எடுக்கப்பெற்றதாகும்.



# இன இழிப்பும் (Genocide) இனப்படுகொலையும் (Genocidal Killings)

கனடா- தம்பு கனகசபை

இனப் படுகொலைக்கும் இன அழிப்புக்கும் உள்ள வேறு பாடுகளையும் அவைகளின் முக்கிய அம்சங்களையும் விளக்கும் நோக்கத்தில் எழுதப்படுவதே இந்தக் கட்டுரை.

சர்வாதிகாரியான ஹிட்லர் இழைத்த யூதமக்களின் இன அழிப்பே ஐக்கிய நாடுகள் 1948-ல் இன அழிப்புச் சட்டம் உருவாகக் காரணமாக இருந்தது. இச்சட்டம் **(Un convention on prevention and punishment of crime of Genocide 1948)**. இன அழிப்புகளில் ஈடுபடும் அல்லது ஈடுபட்ட நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளையும், தடுக்கும் முறைகளையும் தண்டனைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இச்சட்டம் இதுவரை 132 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை இதுவரை இச் சட்டத்தை ஏற்கவில்லை.

ஈழத் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசுகளால் 1948 முதல் இழைக்கப்பட்ட அநீதிகள், கொலைகள், சித்திரவதைகள், பாலியல் கொடுமைகள், பலாத்காரங்கள், கற்பழிப்புகள், உடல் உளத் தீங்குகள், சட்ட விரோத தடுத்து வைப்புக்கள், தமிழ் மக்களின் நிரந்தர இருப்புக்களையும், வதிவிடங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் அகற்றி அறித்து தமிழினத்தை அழித்து இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் புரியப்படும் இச் செயல்கள் இன அழிப்பிற்குள் அடங்குகின்றன. இக்குற்றச் செயல்கள் இனப்படுகொலையை உள்ளடக்கிய இன அழிப்பேயன்றி இனப்படு கொலையல்ல. இனப் படுகொலையென்பது இன அழிப்பின் முக்கிய அங்கமே.

இதன் காரணமாகவே மேற் குறிப்பிட்ட ஐக்கிய நாடு சட்டத்தில் முதல் அங்கமாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இச்சட்டத்தின்படி இன அழிப்பு பின்வரும் செயல்களையும், இலக்குகளையும் அவைகளை அடையும் நோக்கத்துடன் இலக்குகளாகக் கொண்டு புரியப்பட்டிருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் பிரிவுகள் பின்வருமாறு:

இன அழிப்பு பின் வரும் செயல்களில் ஏதாவது ஒன்று தானும் ஒரு தேசிய அல்லது இன, அல்லது சமய அல்லது சமூக குழுவினரை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் இழைத்திருக்கப்படல் வேண்டும்.

1. மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு குழுவினரை கொலை செய்தல்.
2. மோசமான உடல் உளத்தீங்குகளை அக்குழுவின் அங்கத்தினர்களுக்கு விளைவித்தல்.
3. அக்குழுவினரின் ஒரு பகுதியினரையோ அல்லது முழுக் குழுவினரையும் முற்றாக அழித்து விடக் கூடிய வாழ்வுத் தீங்குகளை அவர்கள் மீது பிரயோகித்தல்.
4. அக்குழுவினருக்குள் பிறப்புகள் நிகழாமல் தடுப்பதற்கான வழிவகைகளைத் திணித்தல்.
5. அக்குழுவினரின் சிறார்களை இன்நொரு பிறிதான குழுவிற்கு மாற்றுதல்.

மேற்குறிப்பிட்ட இன அழிப்பிற்கான வரைவிலக்கணத்தை அவதானித்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டது. இனப்படுகொலைகள் அடங்கிய இன அழிப்பே என்பதை தெளிவாக அறியலாம். இன அளிப்புக்கு முக்கியமான ஐந்து அம்சங்களில் இனப் படுகொலை முதலாவது முக்கிய அம்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் இனப்படுகொலைகளுடன் இன அழிப்புக்கான பின்வரும் குற்றச் செயல்கள் இலங்கை அரசுகளால் 1956ல் இருந்து புரியப்பட்டிருப்பமை யாவரும் அறிந்ததே.

உதாரணமாக பின்வரும் சிங்கள அரசுகளின் செயல்பாடுகளை குறிப்பிடலாம்.

1. இனப்படு கொலைகள் (1958, 1977, 1981, 1983, 1987, 1995 (2006 – 2009) தொடர் யுத்தம்.

1958 முதல் 156 இனப்படுகொலைகள் தமிழ் பகுதிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளால் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன.

உதாரணமாக குமுதினிப் படகுக் கொலைகள் போன்றவை.

2. 1948 முதல் தமிழ் பகுதிகளில் நிகழ்த்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள்.
3. புத்தமய மாக்கல்கள் - புத்தவிகாரைகள் புத்தர் சிலைகள் தமிழ் பகுதிகளில் அமைத்தல்.
4. சிங்கள மொழித் திணிப்புகள்.
5. அரச சேவைகளில் தமிழர்களுக்கு பாரபட்சம்.
6. தமிழ் பகுதிக் காணிகளை இராணுவம் கைப்பற்றுதல், அதன் மூலம் தமிழ் மக்களை பலாத்காரமாக இடம் பெயரச் செய்தல்.
7. இளைஞர்கள் யுவதிகள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல். அத்துடன் கால வரையறை இன்றி தடுத்து வைத்தல். மேலும் இவர்களுக்கு நீதிமன்ற உதவி மறுத்தல்.
8. கற்பழிப்பு, பாலியல் பலாத்காரங்கள் மற்றும் மனித நேயமற்ற கொடுமைகளை இழைத்தல்.

இவைகளில் இனப்படுகொலைகள் தவிர்த்த மற்றைய சம்பவங்கள் இன அழிப்பை அடையும் நோக்கத்துடன் புரியப்பட்ட, புரியப்படும் கட்டமைப்பு இன அழிப்புச் செயல்கள் (ளுவசரஉவரசயட புநழெ உனைந)

என அழைக்கப்படுவதோடு இன அழிப்பு வரைவிலக்கணத்தில் உள்ளடங்கும் செயல்களாகும். உதாரணமாக மியன்மார் **(Burma)** அரசு றோகின்கிய முஸ்லீம் இனத்தை நாட்டிலிருந்து முற்றாக விரட்டி வெளியேற்றியமை தற்பொழுது இனஅழிப்பு என உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவைகளுக்கு மேலாக தற்பொழுது தமிழ் மக்களின் பூர்வீக வாழ்வை உறுதிப்படுத்தும் அடையாளங்கள், வரலாற்றுச் சான்றுகள், வரலாற்று மையங்கள், கட்டிடங்கள், சிதைவுகள் போன்றவற்றை அழித்தும், மறைத்தும், திரிவுபடுத்தும் முயற்சிகளில் அரசாங்கத்தின் தொல்பொருட் திணைக்களம் திட்டமிட்டு ஈடுபட்டு வருகின்றமை இன அழிப்பை பூரணமாக நிறைவேற்றும் செயல்களாகவே கருத முடியும். மேலும் கீரிமலை, திருகோணமலை, திருக்கேதீஸ்வரம், மட்டக்களப்பு, முல்லைத்தீவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தமிழர் இருப்பு சான்றுகளையும் அடையாளங்களையும் அழிக்கும் முயற்சிகள் கட்டமைப்பு இன அழிப்பாக கொள்ள முடியும். உதாரணமாக அண்மையில் குருந்தூர் என்னும் வடக்கு தமிழ் கிராமத்தில் அரசு ஆதரவுடன் பௌத்த குருமார் மற்றும் அரசியல்வாதிகளுடன் இராணுவ பாதுகாப்போடு நிறுவப்பட்ட புத்தர் சிலையும், புத்தவிகாரை அமைக்கும் பணிகளையும் இங்கு குறிப்பிடலாம்.

முடிவாக ஊடகங்களும், ஊடகவியலாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும், சிங்கள அரசுகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் வன்முறைகளையும் கொலைகளையும் இன அழிப்பு எனப் பொருள்படுத்தி குறிப்பிடுவதோடு இனப் படுகொலை இன அழிப்பின் ஒரு முக்கிய அங்கமே என வேறு படுத்துவது பயனுள்ளதாக அமையும்.

இறுதியாக 2009 மேயில் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட 70,000 க்கு மேற்பட்ட அப்பாவி மக்களின் கொடூர இனப் படுகொலைகள் இன அழிப்பின் உச்சமான சம்பவமாகவும் அதனை உறுதிப்படுத்தும் கொடூரச் செயலாக சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

இத்துடன் அரசின் திட்டத்துடன் யாழ்ப்பாணம் பொலீசாரினால் ஏரியூட்டப்பட்ட தென் கிழக்காசியாவின் மிகப் பெரிய யாழ்ப்பாணம் பொது நூலகம் சிங்கள அரசினால் நிகழ்த்தப்பட்ட கலாச்சார இன அழிப்பு என கொள்ள வேண்டும்.

# ஆசிய அமெரிக்கர்கள் மீது வெறுப்பு காரணமாக மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டார்



அமெரிக்காவில் வாழும் ஆசிய அமெரிக்கர்கள் மற்றும் பசிபிக் தீவுவாசிகளுக்கு எதிரான வெறுப்பு காரணமாக மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்கள் கட்டுக்கடங்காத வகையில் அதிகரிப்பதைக் குறைப்பதற்கான சட்டத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று வியாழக்கிழமை கையெழுத்திட்டார், மேலும் இந்த நாளில் வெறுப்பு காரணமாக மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களுக்கும் இனவெறிக்கும் எதிராக ஒன்றிணைந்தார்கள் என்று பெருமிதம் தெரிவித்த பலர் இன்றைய நாள் அமெரிக்க வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டனர்

இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்து, தனது கையொப்பத்திற்காக வெள்ளை மாளிகைக்கு அனுப்பியதற்காக ஜனநாயகக் கட்சியினருக்கும குடியரசுக் கட்சியினருக்கும் ஜோ பைடென் பாராட்டு தெரிவித்தார். மசோதா கையெழுத்திடும் விழாவில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர், இந்த ஒற்றுமையை வெளிப்படுத்தும் முயற்சியானது, தொற்றுநோயின் தாக்கம் அதிகரித்த இந்த நாட்களின் போது பிடன் வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற மிகப்பெரிய ஒன்றாக திகழ்ந்தது

ஏப்ரல் மாதம் செனட் 94-1 வாக்களித்ததைத் தொடர்ந்து, இந்த வாரம் 364-62 என்ற அடிப்படையில் மசோதாவுக்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

தனது ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது நாட்டை ஒன்றிணைக்க உதவ அனைவரும் உதவண்டும் என்ற தனது விருப்பத்தை வலியுறுத்திய ஜோ பைடென், தொடர்ந்து கிழக்கு அறை நிகழ்வின் போது வெறுப்பு மற்றும் இனவெறிக்கு எதிராக போராடுவதற்கு மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று கூறினார்.

"நான் இன்று அமெரிக்கன் என்ற வகையில் பெருமைப்படுகிறேன்," என்று அப்போது ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார்.


## டுறம் வாழ் தமிழ் மக்களுக்கு டுறம் தமிழ் ஒன்றியம் வழங்கும் ஓர் அறிவித்தல்.

**நீங்களோ உங்கள் குடும்பத்தினரோ கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தபட்டிந்தால், தேவைப்படின் உங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி வரவும், மருந்தகங்களில் மருந்துகளை பெற்று தரவும், சமைத்த சைவ உணவை வழங்கவும், தடுப்பூசி பெற செல்ல இயலாதவரை அழைத்து செல்வன போன்ற சேவைகளை ஆனி 30ம் திகதிவரை டுறம் தமிழ் ஒன்றியம் வழங்க இருக்கிறது. இச்சேவையை பெற விரும்புவர்கள் அழையுங்கள் 905 428 7007 அல்லது www.durhamtamils.org என்னும் இணைய தளத்தில் பதிவுகளை செய்துகொள்ளவும்.**



## உங்களுடைய முறை விரைவில் வருகிறது.





ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

## New Services Started
## in
## Markham McNicoll Urgent Care Centre (MMUCC)
## and
## Markham McNicoll Family Care Clinic (MMFCC)



**1. All the patient appointments can be booked on-line.**

**2. Virtual Care (Video or Phone Consultation) bookings available.**

**Visit:** **medcentrehealth.com**

**Phone:** **416-609-3333**



PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Hillsborough
Andrin Homes
Anchor Woods
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Universal City Condos 4
Chestnut Hill Developments
U.C. Homes
Tribute Communities
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
On the Mark Towns
Angus Glen South Village Homes
Kylemore Communities
Victory Green Homes
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9




Carefirst Family Health Team
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch
N

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.









காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# மே பதினெட்டை முன்வைத்துச் சிந்திக்கப்பட வேண்டியவை

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**மே** பதினெட்டை முன்வைத்துச் சிந்திக்கப்பட வேண்டியவை இம்முறையும் தாயகத்தில் அதிகம் மக்கள் பயப்படாத ஒரு நினைவுகூர்தலைத்தான் காண முடிந்தது. அதே-சமயம் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவில் நினைவு கூரப்பட்டுள்ளது. குறிப்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி முன்னைய ஆண்டுகளை விட பரவலாக ஓர் அரசியல் பயில்வாக மாறியிருக்கிறது. நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்தும் விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் முன்னேற வேண்டி இருக்கிறது.ஒரு கஞ்சி மட்டும் போதாது.பெருந்தமிழ் பரப்பில் தமிழ் மக்களை ஒரு உணர்ச்சிப் புள்ளியில் இணைப்பதற்கு மேலும் புதிய வழிகளை தமிழ்மக்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

நினைவுகளை எப்படி ஆழமாகவும் பரவலா-கவும் தலைமுறைகள் தோறும் கடத்தலாம் உலகப் பரப்பில் அனைத்துலக மயப்படுத்தலாம் என்று சிந்திக்க வேண்டும். குறிப்பாக திரைப்படத்துறையில் அதற்கான வாய்ப்புகள் அதிகம். ஒரு காலம் இந்தியாவில் ஈழத் தமிழர்கள் அகதிக-ளாக் கையேந்திகளாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது கோடம்பாக்கத்தில் டொலர்களை முதலீடு செய்யும் ஒரு வளர்ச்சியை ஈழத்தமிழர்கள் பெற்றுவிட்டார்கள். அவ்வாறு கோடம்பாக்கம் திரைத்துறையில் முதலீடு செய்பவர்கள் வணிக நோக்கிலான திரைப்படங்களை நோக்கியே அதிகம் உழைப்பதாக தெரிகிறது. மாறாக ஈழத்தமிழர்களின் கூட்டுக்காயங்களையும் கூட்டு மனவடுக்களையும் வெளிக்கொண்டுவரும் திரைக்காவியங்கள் எத்தனை இதுவரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதைக-ளைக் கூறும் திரைப்படங்கள் எத்தனை வெளிவந்திருக்கின்றன? இனப்படுகொலையை நிரூபிக்கும் கலைச் சாட்சியங்கள் என்று கருதத்தக்க நாவல்கள் சிறுகதைகள் ஓவியங்கள் போன்ற கலைப்படைப்புகள் எத்தனை வெளிவந்திருக்கின்றன? இனப்படுகொலையின் ஆதாரங்களை காட்சிப் படுத்தும் விதத்தில் எத்தனை புகைப்படத்தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன? எத்தனை புகைப்படக் காட்சிகள் உலகப் பரப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன? இவையெல்லாவற்றையும் யார் செய்வது?

நினைவு கூர்வது என்பது அந்த இழப்புக்கு எதிரான நீதியைப் பெறும் ஒரு போராட்டத்தின் பிரிக்கப்படாத ஒரு பகுதியே.. எனவே அதன் இறுதி விளைவைக் கருதிக்கூறின் நினைவுகூர்தல் எனப்படுவது நீதியைப் பெறுவதற்கான ஒரு போராட்டத்தின் பிரிக்கப்பட்டவியலாத ஒரு பகுதிதான். அப்படியென்றால் நினைவு கூர்தல் எனப்படுவதை நீதிக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகத் திட்டமிட வேண்டும் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவது என்பது மூத்த அரசியல் ஆய்வாளர்

மு. திருநாவுக்கரசு கூறுவதுபோல குழந்தை பிள்ளைக்கு நிலைக்கண்ணாடியில் நிலவைக் காட்டுவது போன்றது அல்ல. மாறாக அது நிலவை நோக்கிய ஒரு பயணம். நிலவை நோக்கி எப்படி பயணம் செய்வது? அதற்குரிய பொருத்தமான வழி வரைபடம் எது? பன்னிரண்டாவது நினைவுகூர்தல் காலத்திலாவது அதைக்குறித்து தமிழ்ச்சமூகம் சிந்திக்குமா?

அந்த வழி வரைபடத்தை எங்கிருந்து தொடங்க வேண்டும்? முதலாவதாக தமிழ்த்தரப்பு ஒரு பொருத்தமான தேவை கரு-திய ஐக்கியத்திற்காவது போகவேண்டும். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் தாயகத்திலும் தமிழகத்திலும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் சட்ட வல்லுனர்களும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அப் பொதுக்கட்டமைப்பே நீதியை பெறுவதற்கான வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.

இதுவிடயத்தில் கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்த் தரப்பு முதல் அடியைத்தான் எடுத்து வைத்திருக்கிறது. அது கூடப் போதாது. நடந்தது இனப்படுகொலை என்பதனை தாயகத்துக்கு வெ-ளியே இருக்கக்கூடிய தரப்புக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் மேலும் வெற்றி பெற வேண்டியுள்ளது. தமிழ் வாக்காளர்களை கவனத்தில் எடுத்து நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் மட்டும் போதாது. அவை தொடக்கமே. அவற்றுக்கும் அப்பால் அத்தீர்மானங்கள் நாடுகளின் கொள்கை முடிவுகளாக மாற்றப்படவேண்டும். பதவியில் இருக்கும்வரை இனப்படுகொலை என்பதனை வெளிப்படையாகக் கூறாத அரசியல் தலைவர்களும் நாடுகளின் தலைவர்களும் ஐநாவின் பிரதானிகளும் ஓய்வு பெற்றபின் அதை இனப்படுகொலை என்று கூறுகிறார்கள். அதிலும் குறிப்பாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா - அவருடை-ய காலத்தில்தான் வன்னி கிழக்கு புதை மேடு ஆக்கப்பட்டது - அவர் ஓய்வு பெற்ற பின்னரும் அதை இனப்படுகொலை என்று கூறவில்லை. ஆனால் அதற்கு கிட்ட வரும் ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறார். அவரைப் போன்று ஓய்வு பெற்றவர்கள் தயங்கி தயங்கி ஒப்புக்கொள்ளும் உண்மைகளை பதவியில் இருக்கும்போதே சொல்ல வைக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் தரப்பில் அண்மை ஆண்டுகளாக நினைவுகூர்தலின் போது முன்னாள் ஐநா பிரதானிகளும் ஓய்வுபெற்ற தலைவர்களும் உரை நிகழ்த்துகிறார்கள். இது ஒரு வளர்ச்சி. அடுத்தகட்டமாக பதவியில் இருப்பவர்களும் பொறுப்புக்களில் இருப்பவர்களும் அதைக் கூற வேண்டும். அதுதான் வெற்றி. இது முதலாவது படிக்கட்டு.

இரண்டாவது படிக்கட்டு - அவ்வாறு நாடுகள் தமிழ் மக்களுக்கு சார்பாக கொள்கை தீர்மானங்களை எடுப்பதன் மூலம் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான அனைத்துலக பொ-றிமுறைகளை நோக்கி சான்றுகளையும் சாட்சியங்களையும் தொகுத்து செலுத்தவேண்டும். அனைத்துலக நீதி என்பது அரசுகளின் நீதிதான். அது தூய நீதி அல்ல. எனினும் அனைத்துலக நீதிப் பொறிமுறைகளூடாக சாட்சியங்களை பொருத்தமான விதங்களில் தொகுத்தளிப்பது அவசியம். அனைத்துலக நீதிமன்றங்கள் நடந்தது இனப்படுகொலை என்று தீர்ப்புக்கூறுவது என்பது தமிழ் மக்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும். ஆனால் அந்த நீதி ஒரு அரசியல் நீதியாக தூ லமான ஒரு அரசியல் நடைமுறையாக மாற்றப்பட வேண்டும். இது மிக முக்கியம். அனைத்துலக நீ-திப் பொறிமுறைகள் எதனிடமும் அத்தீர்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அனைத்துலக கட்டமைப்புகள் கிடையாது. அனைத்துலக நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் பிரயோக வடிவத்தை பெறுவது என்றால் அதற்கு நாடுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம். ஆனால் நாடுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் என்பது அறநெறியின் பாற்பட்டது அல்ல முழுக்க முழுக்க நலன்களின் அடிப்படையிலானது.

இதற்கு மிகச்சிறந்த உதாரணம் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு ஆதரவாக வழங்கப்பட்ட தீர்ப்புகள் ஆகும். அத்தீர்ப்புகளை அவற்றின் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியவில்லை. ஏனெனில் சீனா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை தடுத்து வருகிறது. எனவே தமிழ் மக்கள் இதுவிடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும்.

நீதிக்காகப் போராடிய எல்லா மக்களுக்கும் நீதி கிடைக்கவில்லை. மட்டுமல்ல பல சமயங்களில் அது உடனடியாகவும் கிடைக்கவில்லை. குறிப்பாக ஆர்மீனியர்களைப் பொறுத்தவரை அந்த இனப்படுகொலையை உலக சமூகம் இன்னமும் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. 106 ஆண்டுகளின் பின்னர்தான் அதை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. அதுமட்டுமல்ல ஆர்மீனியர்களை இனப் படுகொலை செய்த குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. அதுபோ-லவே செச்சினியர்களை இனப்படுகொலை செய்த குற்றவாளிகளும் தண்டிக்கப்படவில்லை. சூலு மக்களை கொன்றொழித்த குற்றவாளிகளும் தண்டிக்கப்படவில்லை. பியாப்ரா மக்களை கொன்று குவித்த குற்றவாளிகளும் தண்டிக்கப்படவில்லை. பாலஸ்தீனர்களுக்கு இன்று வரையிலும் நீதி கிடைக்கவில்லை. எனவே இந்த உலகில் எல்லா இனப் படுகொலைகளுக்கும் நீதி கிடைக்கவில்லை என்ற குரூரமான முன்னுதாரணத்தில் இருந்து தமிழ்மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இனப்படுகொலைக்கு எதிராக இதுவரை கிடைத்த நீதிகளும் தூய நீதிகள் அல்ல. அவை அரசி-யல் நீதிகள்தான். உதாரணமாக யூதர்களுக்கு இனப்படுகொலைக்கு எதிரான நீதி கிடைத்தது. ஏன் கிடைத்தது? அது அவர்களுடைய புவி-சார் அமைவிடம் காரணமாக கிடைத்தது. அதே காரணத்தால்தான் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பது பின்தள்ளிப்போகிறது.

அது மட்டுமல்ல தமிழ் மக்கள் யாரிடம் நீதி கேட்கிறோம் என்பதிலும் தெளிவாக இருக்க வேண்டும். ஆர்மீனிய இனப் படுகொலையை இன்று வரையிலும் ஏற்றுக்கொள்ளாத ஒரு நாடு பிரித்தானியா. அதுதான் அன்மையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான ஐநா தீர்மானத்தை முன் நகர்த்தியது. அதன் பின்னணியில் நின்ற நாடு அமெரிக்கா. ஆனால் செவ்விந்தியர்களின் இனப்படுகொலையின் மீதுதான் அமெரிக்கா என்ற தேசம் கட்டி எழுப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டு உண்டு. கொன்றொழிக்கப்பட்ட செவ்விந்தியர்களுக்கு இன்றுவரையிலும் நீதி கிடைக்கவில்லை. நூ ரெம்பேர்க் தீர்ப்பாயத்தின் முன் நிறுத்தப்பட்டால் அமெரிக்காவின் எல்லா தலைவர்களையும் தூ க்கில் போட வேண்டியிருக்கும் என்று அமெரிக்க அறிஞராகிய நோஆம் சோம்ஸ்கி கூறியிருக்கிறார். எனவே யாரிடம் நீதி கேட்கிறோம் அந்த நீதியின் புனிதம் எத்தகையது என்பதை குறித்து தமிழ் மக்களிடம் அறம்சார்ந்த விழிப்புணர்வும் வேண்டும் உரிமை சார்ந்த விழிப்புணர்வும் வேண்டும் ராஜீய உறவு சார்ந்த விழிப்புணர்வும் வேண்டும்.

மிகச்சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்கள் ஒருபுறம் இனப்படுகொலைக்கு உள்ளாகிறார்கள். அதன் விளைவாக உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது மிஞ்சியிருக்கும் எல்லாருமே இனப்படுகொலைக்கு தப்பியவர்கள்தான். தாயகத்துக்கு வெளியே ஆகக்கூடியது மூன்றில் ஒரு பகுதியினர் வசிக்கிறார்கள். புலப்பெயர்ச்சி ஒருவிதத்தில் தாயகத்தின் சனச்செறிவை பாரதூ ரமான விதங்களில் குறைத்திருக்கிறது. இன்னொரு விதத்தில் அதுவே நீதிக்கான போராட்டத்தின் பலமாகவும் மாறி இருக்கிறது. ஒரு தீமையில் கிடைத்த நன்மை.

எனவே நீதியை பெறுவதற்கான வழி வரைபடத்தை முதலில் தமிழ் தரப்பு தயாரிக்க வேண்டும். அதற்கு முதலில் தமிழ் தரப்பு ஒரு பொது கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இது மிக அவசியமான ஒரு முன் நிபந்தனையாகும். இதுவ-ரையிலும் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தீர்மானங்களை யாரும் மையத்திலிருந்து வழிநடத்தவில்லை. அவை இயல்பாக தமிழ் உணர்வின் பாற்பட்டும் தமிழ் வாக்குவங்கியை இலக்காகக் கொண்டும் நிறைவேற்றப்பட்டவை. எனினும் இத்தீர்மானங்களை இனியாவது ஒரு மையத்தில் கோர்க்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும். எதுவும் தாயகத்தை மையமாகக் திட்டமிடப்பட வேண்டும்.

இது தொடர்பில் அதிகம் பொறுப்போடும் தீர்க்கதரிசனமாகவும் சிந்திக்க வேண்டியது தாயகத்திலுள்ள கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகங்களும்தான். ஏனெனில் தாயகம்தான் மையம். இந்த மையத்தில் இருந்தே எதுவும் திட்டமிடப்பட வேண்டும். மையம் வெளியில் இருக்க முடியாது. குஞ்சு முட்டையை உடைத்துக் கொண்டு வெளியில் வரவேண்டும். குஞ்சு முட்டைக் கோதைக் கொத்தாதவரை அதை வெளியில் இருந்து உடைக்க முற்படுவது சில சமயம் முட்டையைக் கூழாக்கிவிடும். எனவே இது விடயத்தில் தாயகத்தில் தமிழ்த் தரப்பு குறைந்தது தந்திரோபாயமாக ஆவது ஐக்கியப்பட்டு ஒரு பலமான மையமாக மாற வேண்டியது தவிர்க்கப்பட முடியாத ஒரு முன் நிபந்தனையாகும் ஐக்கியம் இல்லையென்றால் தமிழ் மக்களுக்கு நீதி இல்லை.

### வீணாவின் கவிக்கணை

நம்மை வேண்டாதவரை
நமக்கும் வேண்டாம்,
நட்போ? காதலோ? உறவோ?
எல்லாமே நெருக்கமானவை தான்!
ஒருவர் நம்மை வெறுக்கும்
மனநிலைக்கு வந்து விட்டால்,
அவரை விட்டு விலகுவதே
சிறந்ததென்பேன்,
உன்னை உண்மையாக
நேசித்த உயிராயின்,
வலி அவர்களுக்கும் தான் சொந்தம்,
புயலுக்குப் பின் அமைதி போல,
அமைதியான இடைவெளி என்றுமே,
அழகான உறவை பதப்படுத்தி
வலுவான உறவாக திருப்பிக்கொடுக்கும்,
அதுவரை காத்திரு மனமே!



ஜீவன் முக்தி (பகுதி) 114

# கேள்வி - பதில்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

நான் இதுவரை, பல சன்யாஸிகளையும் பிரம்மச்சாரிகளையும் கண்டிருக்கிறேன். அதில் பெரும்பாலோனோர் சிரிப்பின்றி இருக்கின்றார்கள். ஆனால், உங்களுடைய பிரமச்சாரிகள், சிரித்தபடி ஆனந்தமாக இருக்கிறார்களே, இந்த வித்தியாசத்தின் காரணம் என்ன?

இந்தக் கேள்வி எப்படி இருக்கின்றதென்றால் நான் பல தோட்டம் சுற்றியிருந்தேன். வெறும் தரிசாகவும், முள் மரங்களாகவும்தான் வளர்ந்து கிடக்குது. உங்கள் தோட்டத்தில மட்டும், இவ்வளவு மலர்கள் மலர்ந்து இருக்கே காரணம் என்ன? என்று கேட்பதுபோல் உள்ளது.

காரணம் தோட்டக்காரர்.

தோட்டம் அமைக்கும் நுட்பம் தெரிந்த தோட்டக்காரர். அதுதான் வேறு ஒன்றுமில்லை. அவர்களுக்கு, பிரம்மச்சரியத்துக்கான நுட்பம் வழங்கப்பட்டு இருக்கிறது. பிரம்மச்சரியம் என்பது அருமையான தியான நுட்பம்.

பூக்கள் அதற்கேற்ற சூழலை ஏற்படுத்தினால், தானாகவே மலரும், தானாகவே மலரச் செய்யலாம்.

பூவை எப்படி மலரச் செய்வதென்று, நான்கைந்து பேர் அடிச்சுக்கொண்டு, மாய்ந்துகொண்டு இருந்தால்... அவன் தோட்டத்தில் மட்டும் பூத்து இருக்கே, நம்ம தோட்டத்திலே பூ ஏன் பூக்கவில்லை, என்று பரபரவென்று தரையை தோண்டிக்கொண்டு இருந்தால் நடக்குமா?

அது நடக்காது.

அதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

வெறும் காவி போட்டாலோ, வீபூதி பூசினாலோ மட்டும் பிரமச்சரியம் வந்திடாது.

அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

அதற்கான நுட்பம் உருவாக்கப்பட வேண்டும்.

அதாவது அவர்களுக்குத் தேவை என்ன என்று அவர்களுக்கு புரிகின்ற மொ-ழியில் சொல்லப்பட வேண்டும்.

அதனுடைய லாப நஷ்டங்களை அவர்களே புரிந்து பார்க்கின்ற சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். ரொம்ப அழகா விவேகானந்தர் சொல்வார். Freedom ளை the basic condition for any Growth'

சுதந்திரம்தான் எந்த வளர்ச்சிக்குமான ஒஷர தேவை. என்னுடைய பிரமச்சாரிகளுக்கு நான் கொடுத்திருக்கின்ற மிகப்பெரும் சுதந்திரம் எப்பொழுது வேண்டுமானாலும் கீழே போட்டுவிட்டு கல்யாணம் செய்து கொள்ளலாம். அந்த சுதந்திரத்தினால்தான், அவர்களால் பிரமச்சரியத்தில் மலர முடிகிறது.

சன்யாஸம் எடுத்தபிறகு திருமணம் செய்து கொள்ள முடியாது. அதனால்தான் அவர்கள் ஐந்து வருடமாவது தங்களுக்குள் ஆழ்ந்து பார்க்க சுதந்திரம் தந்து அதற்குப் பிறகு சன்யாஸ பயிற்சியை துவங்குவோம்.

முதல் விஷயம் சுதந்திரமான உணர்வு. எந்தக் காரணத்திற்காகவும், பிரமச்சரியம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்கின்ற உணர்வுத் தெளிவு பிறக்க வேண்டும்.

அழுத்தப்படாத ஒரு சுதந்திரம் இருக்கும்பொழுது அந்த விரதத்தை எடுத்துக்கொள்கின்ற தெளிவே, அதை காப்பாற்றுகின்ற ஸ்ரத்தையாக மாற்றிவிடும்.

அதிஸ்டவசமாக சன்யாஸம் போனவர்கள் அல்ல.

நான் எப்பவும் அதுதான் சொல்வதுண்டு. யாருக்காவது, இந்தப் பிரமச்சரியம் பற்றி ஏதாவது பிரச்சனை வந்தால், முதலில், நான் கேட்கும் கேள்வி இதுதான்.

அப்பா, கல்யாணம் பண்ணிக்கனுமா, அருமையாகப் பண்ணிக்கோ, அதுக்காக வெளியில் போகவேனும் என்கின்ற அவசியம்கூட இல்லை. அதாவது வேற எந்தக் கரணத்திற்காகவும், பிரமச்சரிய விரதம் எடுக்கக்கூடாது. பிரமச்சரிய விரதம் எதற்காக எடுக்க வேண்டும் என்றால் இயல்பாகி, இது நல்லாத்தானே இருக்குது. இப்படியே இருக்கலாம். என்ற இயல்பான முடிவாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

இரண்டாவது முறை பிரமச்சரியத்தைப் பற்றி யோசித்தால்கூட, அவருக்கு பிரமச்சரியத்திற்குத் தகுதி கிடையாது. அவருக்கு அந்த விரதம் தேவையில்லை. ஏனென்றால் இது risk எடுக்கிற விரதம் இல்லை.

என்கூட இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகக்கூட பிரமச்சரியம் எடுக்கக்கூடாது. உனக்கே , அது பிடித்து இருந்தால் எடுத்துக்கொள். பிரமச்சரியம் எடுத்தால், என்னை விட்டு போய்விடுவோமோ என்று பயப்படத் தேவையில்லை.

ஆனால் விரதத்தை எடுத்தால் கடைப்பிடிக்கவேண்டும்.

என்று அவர்களின் சுதந்திரம் உணர்வு சற்றும் பாதிக்கப்படாமல் சொல்வதுண்டு உள்ளுலகிலும், வெளியுலகிலும், முழுமையாய் சுதந்திரமாய் அவர்களை வளர்ப்பதினால்தான் அவ்வளவு ஆனந்தமாக இருக்கிறார்கள். இல்லாவிட்டால் இந்தக் காலத்தில் பிரம்மச்சாரிகளாகவும், 13 மருத்துவர்கள், 40 என்ஜினியர்கள், 50ற்கும் மேற்பட்ட பட்டப்படிப்பு படித்தவர்களென 120பேர் ஒரே இடத்தில் பிரமச்சரியம் எனும் வாழ்வை கொண்டாடும் ஆனந்தமாக இருக்க முடியுமா?

எதையோ இழந்ததினால் இவர்கள் பிரமச்சரியம் பெறவில்லை. எதனாலும் அழிக்கப்படாத உணர்வோடு ஒன்றியதால்தான் இவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறார்கள்.

வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயமுமே கசக்கும். ன்னவென்றால.

சன்யாஸம் என்று முடிவு எடுத்தவர்களுக்கும், அவர்கள் தங்கள் உணர்வை சூக்சுமமாக்க ஒன்பது மாதங்கள் செய்ய வேண்டிய தியானங்களையும், ஈஸ்வரள் அளிக்கின்றார்.

ஸ்தூலத்தை விட்டு சூக்சுமத்திற்கும், சூக்சுமத்தை விட்டுவிட்டு பரத்திற்கும் பரத்தை விட்டு, ஒவ்வொன்றையும் விட்டுவிட்டுத் தியானிக்க இறுதியில் சிவநிலை அடையப்படும்.

முதலில் ஸ்தூல ரீதியாக உடலால் அனுபவிப்பதை விடுதல்', இரண்டாவதாக கனவில் இன்னொரு துணை தேவைப்படகடகூடாது. தேவைப்படுகிறாற்போன்று எண்ணம் வந்தால்கூட, அதில் விழிப்புணர்வை எடுத்துவந்து விழித்துக்கொள்வது',

மூன்றாவது சூட்சுமத்தில் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வது. பரநிலை-யில் தூய்மை ஆக்கிக்கொள்வது... ரொம்ப ஆழமான சத்தியம். தான் ஆண்' நான் பெண்' என்ற கருத்தையே மறந்து விடுவது. இப்படி நடக்கும் போதுதான் நிஜமாகவே ஒரு ஆண் முழு ஆணாகின்றார். ஒரு பெண் முழுப் பெண்ணாகின்றாள்.

**நடந்துபோய் இலக்கை அடைய முயற்சி செய்பவர்களுக்கு: அருமையான நுட்பம் ஒன்றின் உதவியோடு தொடங்கலாம்.....**

முதல்படி:

ஒரு ருசியான இனிப்பான நாக்கில் ஒடுத்து வைத்து, ஆழந்து கண்களை மூடி, அந்த நேரத்தில், நாக்கில் ஏற்படுகிற ஆனந்தத்தைத் தியானியுங்கள். சுவையைப் புரிந்துகொண்ட பிறகு... அந்த பொருள் இல்லாமலேயே, அந்த சுகத்தை மட்டும் தியானித்தால் என்னவாகும்?

அந்தபொருள் இல்லாமலேயே, நாக்கிலே ருசி உணரப்படும்.

இரண்டாவது படி:

அதற்குப் பிறகு அந்தப்பொருளைப் பற்றி நினைவைக்கூட எடுத்து வராமல், சுகத்தை மட்டும் கொண்டு வருதல்.

முதலில் இனிப்பை நாக்கில் வைத்து. ருசியைத் தியானிப்பது. ஆழமான விழிப்புணர்வோடு உணர்வுபூர்வமாக இனிப்பை வைக்காமல், இனிப்பை வைப்பது போன்று பாவனை மட்டும் செய்து, அதே ருசியை, சுவையை ஏற்படுத்துவது.

மூன்றாவது படி:

அதற்குப்பிறகு இந்த இனிப்பை மனதால் கூட நினைக்காமல், நாவில் வைக்காமல் ருசியை ருசித்தல் தன்மையை மட்டும் ஏற்படுத்துவது.

அப்போது என்ன ஆகும்? இனிப்பு இல்லாமலேயே ருசிக்கின்ற தன்மை, நாக்கிற்குள் மலர்ந்துவிடும்.

அதைத்தான் அமிர்தம் என்று சொல்வது. இனிப்பு இல்லாமல் ருசிக்கின்ற தன்மை வந்தால், அமிர்த நிலைக்குப் போய்விடும்.

இப்படி ஒவ்வொரு இந்திரியத்தோடும். அந்தந்த இந்திரிய சுகத்தைச் சூக்சுமமாக வைத்துத் தியானம் செய்தல். நன்றாக ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள்.

*(தொடரும்...)*

அன்று பெங்களுரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

BEST INDIAN ASTROLOGER & PSYCHIC
Pandit: VEERANANDA
காசியில் இருந்து வருகை தந்துள்ளார்
31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவர்


MOST POWERFUL SPIRITUALIST
Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். படைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான் அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு்டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ'டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர் ஆயுர்வேத சிகிச்சை

Call For Appoinment: 647-858-3355
1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2
Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )

# எழுவர் விடுதலை; தமிழக அமைச்சரவை தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்க வேண்டும்

## குடியரசுத் தலைவருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

பேரறிவாளன் உள்ளிட்ட எழுவர் விடுதலையை வலியுறுத்தி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தை, டி.ஆர்.பாலு எம்.பி. நேரில் அளித்தார். இது தொடர்பாக, தமிழக அரசு மே 20 வெளியிட்ட செய்திக்குறிப்பு:

“முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு, 30 வருடங்களுக்கும் மேலாக சிறையில் வாடும் பேரறிவாளன், முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், பி.ரவிச்சந்திரன், எஸ்.நளினி ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அமைச்சரவை 9.9.2018 அன்று தீர்மானம் நிறைவேற்றி தமிழ்நாடு ஆளுநருக்கு அனுப்பியுள்ளதையும், ‘அந்த அமைச்சரவை தீர்மானத்தின் மீது முடிவு எடுக்கும்



அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் இருக்கிறது எனக் கூறி, தமிழக ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு தமிழ்நாடு அரசின் அமைச்சரவைத் தீர்மானத்தை அனுப்பி வைத்திருப்பதையும், சுட்டிக்காட்டி 19.5.2021 (நேற்று) குடியரசுத் தலைவருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், ‘மேற்கண்ட ஏழு பேரும் 30 வருடத்திற்கும் மேலாக சிறையில் வாடுகிறார்கள். உச்ச நீதிமன்றமே கரோனா தொற்றின் பரவலைத் தடுக்க சிறைச்சாலைகளில் உள்ள கூட்ட நெருக்கடியை நீக்கும் பொருட்டு கைதிகளை விடுதலை செய்ய அறிவுறுத்தியுள்ளது எனத் தெரிவித்து, ஏழு பேரையும் விடுதலை செய்ய 9.9.2018 அன்று தமிழ்நாடு அமைச்சரவை நிறைவேற்றி அனுப்பியுள்ள தீர்மானத்தை உடனடியாக ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்க வேண்டும்‘ என்று வலியுறுத்தியுள்ளார்.

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு தமிழ்நாடு முதல்வர் எழுதிய கடிதத்தை நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் இன்று நேரில் அளித்துள்ளார்”. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# முதுமலையில் பொன்விழா கண்ட இரட்டையர்கள் ‘விஜய்’, ‘சுஜய்’ யானைகள்



முதுமலையில் பிறந்த இரட்டை யானைகள் ‘விஜய்’ மற்றும் ‘சுஜய்’, தங்கள் 50 வது பிறந்த நாளை பூர்த்தி செய்துள்ளன.நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகம் தெப்பக்காட்டில் வளர்ப்பு யானைகள் முகாம் உள்ளது. ஆசியாவிலேயே பெரிய யானைகள் வளர்ப்பு முகாம் இதுதான். வனத்தில் தாயைப் பிரிந்து தவிக்கும் குட்டிகள், ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் காட்டு யானைகள் அடக்கி ஆளப்பட்டு, வளர்ப்பு யானைகளாக வளர்க்கப்படுகின்றன.

தற்போது 27 வளர்ப்பு யானைகளை வனத்துறையினர் பராமரித்து வருகின்றனர். இவற்றில், ‘பாமா’, ‘இந்தர்’, ‘அண்ணா’ மற்றும் ‘காமாட்சி’ ஆகிய நான்கு யானைகள் 60 வயதை எட்டியதை அடுத்து, அவற்றுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.இவற்றில், 2006 ம் ஆண்டு முதுமலைக்கு உட்பட்ட கார்குடி வனத்தில் 3 மாதக் குட்டியாக தெப்பக்காடு முகாமுக்குக் கொண்டு வரப்பட்டது ‘மசினி’. 9 ஆண்டுகள் யானைகள் முகாமில் வளர்ந்தது. மிகவும் அமைதியாக, சொன்ன பேச்சைத் தட்டாமல் வளர்ந்த யானை, சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு 2015ம் ஆண்டு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் தாய் வீட்டுக்குத் திரும்பியுள்ளது ‘மசினி’.கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை சரகத்தில் அய்யூர் பகுதியில் தாயிடமிருந்து பிரிந்த யானைக் குட்டி ‘ரகு’ என்ற பெயருடன் வளர்ந்து வருகிறது.’மூர்த்தி’ எனும் தந்தமில்லாத ‘மக்னா’ யானை கேரளாவில் 17 பேரைக் கொன்றது. இதனால் இந்த யானையை சுட்டுக்கொல்ல கேரள வனத்துறை உத்தரவிட்டது. ஆனால், அப்போது முதுமலை சரணாலயக் காப்பாளராக இருந்த உதயன் தலைமையில் வனத்துறையினர், யானையைப் பிடித்து முதுமலை கொண்டு வந்தனர். ‘மூர்த்தி’ எனப் பெயர் சூட்டி வளர்க்கப்பட்டு வருகிறது.

இதேபோல, 2016ம் ஆண்டு பந்தலூர் அருகே மூவரைக் கொன்ற ஆட்கொல்லி யானைக்கு மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்டு, முதுமலை கொண்டு வரப்பட்டது. கராலில் அடைக்கப்பட்டு, தற்போது வளர்ப்பு யானையாக மாறியுள்ளது. ‘சுள்ளிக் கொம்பன்’ என்றழைக்கப்பட்ட இந்த யானைக்கு ‘சீனிவாசன்’ என வனத்துறையினர் பெயரிட்டனர்.ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட சத்தியமங்கலம் சரகத்தில் தாயிடமிருந்து பிரிந்த 3 மாதக் குட்டியை, அதன் கூட்டத்துடன் இணைக்க வனத்துறையினர் முயற்சி மேற்கொண்டனர். ஆனால், யானைக்கூட்டம் குட்டியை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனால், குட்டி தனித்து விடப்பட்டதால், குட்டி யானை முதுமலை புலிகள் காப்பகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.தாயைப் பிரிந்து சோர்வாக இருந்து குட்டி யானைக்கு முதுமலையில் வனத்துறையினர் உரிய சிகிச்சை அளித்தனர். கடந்த ஓராண்டாக முதுமலையில் பாகன் பொம்மனின் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வரும் இந்தக் குட்டி யானைக்கு வனத்துறையினர் ‘பொம்மி’ எனப் பெயர் சூட்டியுள்ளனர்.பொன்விழா கண்ட இரட்டையர்கள்முகாமில் உள்ள ஒவ்வொரு யானைக்கும் ஒரு வரலாறு உள்ள நிலையில், இந்த முகாமிலேயே பிறந்த இரட்டையர்கள் இன்று (மே 20) பொன்விழாவை பூர்த்தி செய்துள்ளன.

இரட்டையர்களான ‘விஜய்’, ‘சுஜய்’ பயிற்சி பெற்று கும்கிகளாக உருமாறியுள்ளன. இவை நீலகிரி மற்றும் கோவையில் காட்டு யானைகளை விரட்டவும், பிடிக்கவும் பணியாற்றி வருகின்றன.இந்நிலையில், ‘சுஜய்’ கடந்த 2017ம் ஆண்டு கோவை சாடிவயல் முகாமில், காட்டு யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்டபோது, காட்டு யானைகள் தாக்கியதில், தனது ஒரு தந்தத்தை இழந்தது. கோவையை அச்சுறுத்தி வந்த ‘விநாயகா’, ‘சின்னதம்பி’ மற்றும் ‘சங்கர்’ ஆகிய யானைகளைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டது.இந்த இரட்டையர்கள், முகாமில் ‘தேவகி’ என்ற யானைக்கு கடந்த 1971ம் ஆண்டு மே மாதம் 20ம் தேதி பிறந்தன. இன்று, இந்த இரட்டையர்கள் 50 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளன.

# கரோனா காலத்தில் ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகள்; உறவினர் பராமரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துக: கமல்

கரோனா காலத்தில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை அமைத்துத் தர தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக கமல்ஹாசன் இன்று (மே 20) வெளியிட்ட அறிக்கை: “கரோனா பெருந்தொற்றின் கொடூர தாண்டவத்தால் நிறைய குழந்தைகள் பெற்றோரை இழந்து தவிக்கின்றனர். வாடி நிற்கும் பிஞ்சுகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகி இருக்கிறது.மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மாநில அரசுகள் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு இலவசக் கல்வி மற்றும் நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

புது டெல்லி அரசும் இலவசக் கல்வி வழங்குகிறது. ஆந்திர அரசு பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு வங்கிக் கணக்கு தொடங்கி 10 லட்சம் ரூபாய் டெபாசிட் தொகையாகச் செலுத்தப்படும் என்றும், இந்த டெபாசிட் தொகையின் மூலமாகக் கிடைக்கும் வட்டி வருவாய் மூலம் பாதுகாவலர் அந்தக் குழந்தையை நன்றாக கவனிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளது. பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகளை அவர்களின் உறவினர் அல்லது பெற்றோரில் நெருங்கிய நட்பு வட்டாரத்தினர் பராமரிப்பதே சிறந்தது என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஏற்கெனவே இழப்பில் வாடும் குழந்தைகளை முன்பின் தெரியாதவர்கள் தத்தெடுத்தால், குழந்தைகள் மனரீதியில் பாதிக்கப்பட அதிக வாய்ப்பிருக்கிறது என்கிறார்கள்.எனவே, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் மாநிலத் துறைகளும் சிறார் நீதிச் சட்டம் அடிப்படையில் பெற்றோரை இழந்தவர்களைப் பராமரிக்க ‘உறவினர் பராமரிப்புத் திட்டத்தை’ (kinship care) வளர்ப்பு மற்றும் பராமரிப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாகச் செயல்படுத்த வேண்டும்.மாவட்ட குழந்தை பாதுகாப்புப் பிரிவு சார்பில் இந்த நெருக்கடியான காலத்தில், கரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் பெற்றோர்களின் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்கிறார்களா என்பதை உறுதி செய்யவும் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். குழந்தைகளுக்கும், அவர்களைப் பராமரிக்கவும் ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை அமைத்துத் தர தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைக்கிறேன்”. இவ்வாறு கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

# கருப்பு பூஞ்சை நோய் குறித்து அச்சம் வேண்டாம்; தமிழகத்தில் 9 பேர் பாதிப்பு; உயிரிழப்பு இல்லை: ராதாகிருஷ்ணன் பேட்டி

கருப்பு பூஞ்சை நோய் குறித்து மக்கள் அச்சமடைய வேண்டாம் என, தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சென்னை, டிஎம்எஸ் வளாகத்தில் மே 20 ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியதாவது: "கருப்பு பூஞ்சை (மியூகோர்மைகோசிஸ்) நோய் குறித்து தேவையற்ற பீதி அனைவரது மத்தியிலும் வந்திருக்கிறது. இதுகுறித்து தேவையற்ற பீதி இருக்க வேண்டியதில்லை. இது ஏற்கெனவே இருக்கக்கூடியதுதான்.

கோவிட் தொற்றால் வரக்கூடிய புதிய வகையிலான, அதிகமாகப் பரவக்கூடியது என்பது போன்று வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் தகவல்கள் உலா வருகின்றன. பதற்றம் வேண்டாம். இந்த பூஞ்சை தொற்று பல ஆண்டுகளாக இருக்கக்கூடியது. கோவிட் தொற்றுக்கு முன்பிருந்தே இந்த பூஞ்சை தொற்று இருக்கிறது. கட்டுப்படுத்த முடியாத நீரிழிவு நோய் உள்ளவர்கள், ஸ்டீராய்டு எடுத்துக் கொள்பவர்கள், ஐசியூவில் பல நாட்களாக இருக்கக்கூடியவர்கள் உள்ளிட்டோருக்கு இந்தத் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறுகின்றனர்.

ராஜஸ்தான், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் கோவிட் தொற்று உள்ளவர்களில் இதன் தாக்கம் அதிகம் இருப்பதாக செய்தி வந்தது. இதனை 'அறிவிக்கப்பட வேண்டிய நோயாக' பொது சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இதன் அர்த்தம், இந்த நோய் எங்காவது யாருக்காவது வந்தால் அதனைப் பொது சுகாதாரத்துறைக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

இது குணப்படுத்தப்படக்கூடிய நோய். சைனஸ் போன்ற அறிகுறிகள் வந்தவுடனேயே உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றால் இதனை குணப்படுத்த முடியும். இந்த பாதிப்பு குறித்துக் கண்டறிய 10 பேர் கொண்ட தனிக்குழுவை மாநில அரசு அமைத்துள்ளது. தமிழகத்தில் நீரிழிவு நோயாளிகள் 7 பேர் உள்ளிட்ட 9 நபர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நலமுடன் உள்ளனர். சிகிச்சை எடுத்து வருகின்றனர். தமிழகத்தில் இதனால் இதுவரை உயிரிழப்பு இல்லை. சிகிச்சைக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் உள்ளன". இவ்வாறு ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

# கல்கியின் பொன்னியின் செல்வன்

*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் #12)*

## வந்தியத்தேவனின் தஞ்சைப் பயணம்


'வேளக்காரர் படையை மீறி அரச உயிருக்கு ஆபத்து நேர்ந்தால், துர்க்கை சந்நிதியில் தங்களுடைய தலையை தாங்களே வெட்டிக் கொள்வார்கள்' என்ற கொடூர சபதம் செய்ததை இது நினைவு படுத்துகிறது. கொடி பிடித்தவர்களைத் தொடர்ந்து பேரிகைகள் முழக்கம் வந்தது முழக்கத்தை தொடர்ந்து சிறுபறை, பெரும்பறை, தம்பட்டம் முழங்க ஐம்பது பேர் வந்தனர். மேலும் ஐம்பது பேர் நீண்ட வளைந்த கொம்புகளை பாம் பாம் என்று ஊதியபடி வந்தனர். இந்த இசைக்கு பின்னால் ஆயிரம் வீரர்கள் வாழ்த்தொலிகள் இடி முழங்க, குரல் எழுப்பிக் கொண்டு வந்தனர். 'வீரப் புலிக் கொடி பாரெல்லாம் பரந்து வெல்க! வெல்க! வெல்க! வெற்றி வேல் வீரவேல்' என்றனர்.

வேளக்காரப் படை நகர்ந்து சென்றதும், வந்தியத்தேவன் கோட்டைக்குள் போவதைப்பற்றி சிந்தித்தான். அத்துடன் இரவு பகல் எந்த நேரத்திலும் கோட்டைக்குள் பிரவேசிக்கும் உரிமை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களிற்கும், அமைச்சர்களுக்கும், தண்ட நாயக்கர்களிற்கும், பழுவேட்டரையர் குடம்பத்தாரிற்கும் மட்டுமே உண்டு என்பதை அறிந்திருந்தான். அதனால் இந்த இரவை வெளியில் கழிக்க வேண்டும். நாளை சூரிய உதயத்தில் கோட்டைக்குள் பிரவேசிக்கலாம் என்று தீர்மானித்தான். அப்பொழுது பூக்கூடையுடன் சென்ற அந்த வாலிபனை மீண்டும் தேடிக் கண்டான். அவனி-டம். 'தம்பி இந்த நகரில் தங்குவதற்கு இடம் வேண்டும் நல்ல விடுதிக்கு வழி காட்டுவாயா?' என்று கேட்டான். 'ஆமாம் இங்கே நிறைய இடமுண்டு ஆனால் உங்களிற்கு இஸ்ரமிருந்தால் எங்கள் வீட்டில் தங்க வாருங்கள் என்று சிறு தயக்கத்துடன் கேட்டான்'. உடனே வந்தியத்தேவன் 'உன் பெயர் என்ன?' என்று கேட்க, வாலிபன் 'என் பெயர் சேத்தன் அமுதன் நகர எல்லை தாண்டி என் பூந்தோட்டம் இருக்கிறது, அங்கே எனக்கு ஒரு சிறிய வீடும் உண்டு' என்றான். அதற்கு வந்தியத்தேவன் 'கட்டாயம் வருவேன் உன்னைப் பெற்ற உத்தமியை தரிசிக்க வேண்டும்' என்றான். இருவரும் பேசியபடி வீட்டை அடைந்தார்கள்.

அப்பொழுது அமுதனின் தாய் அங்கு வந்தாள். சேத்தன் அமுதன் தன் தாயிற்கு சைகை மூலம் இவன் அயல் தேசத்தில் இருந்து வந்த விருந்தாளி என்று அறிமுகம் செய்தான். வந்தியத்தேவன் அந்த மாதரசியின் முகத்தில் கருணையும், அமைதியும் நிறைந்து ததும்பியதைக் கண்டான். கூரிய அறிவின் ஒளியும் வீசியது ஆனால் பேசும் திறனை இழந்தவள். காதும் கேட்காது என்று தெரிந்து கொண்டான். சேத்தன் அமுதனின் தாய் தன் முகபாவ-னையாலேயே வந்தியத்தேவனை வரவேற்று, விருந்திற்கு அழைத்தாள். அந்த அம்மாள் இலை போட்டு விருந்து பரிமாறத் தொடங்கினாள். இடியப்பமும், இனிப்பான தேங்காய்ப்பாலும் கொடுத்தாள். பிறகு புளிக்கறியும், சோளமா பணியாரமும் வந்தன. பின் காற்படி அரிசிச் சோறும், அரைப்படி தயிரும் வந்தது. யாவையும் சாப்பிட்டு பசி ஆறினான். இந்த உணவைப் போல் அவன் என்றும் சுவையாக உண்டதில்லை என்று சொல்லிவிட்டு எழுந்தான். இந்த தஞ்சைக் கோட்டைக்குள் சுந்தர சோழ சக்ரவர்த்தியையும், அவரு-டைய அரண்மனைப் பரிவாரங்களையும் விட வேறு யார் யார் இருக்கிறார்கள்? என்று வந்தியத்தேவன் அமுதனிடம் கேட்டான்.

அதற்கு அமுதன் 'பெரியபழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர், இவர்களின் மாளிகை பரிவாரங்கள், தன பொக்கிஷம், தானிய பண்டாரம், இவற்றை பரிபாலிக்கும் அதிகாரிகளும் கணக்காளர்களும், சுந்தர சோழரிக் நம்பிக்கைக்கும் அபிமானத்திற்கும் பாத்திரமான அமைச்சர் அன்பின் அநிருத்த பிம்மராயர், சின்ன பழுவேட்டரையர் தலைமையில் தஞ்சை கோட்டைக் காவல் வீரர்கள், அவருடைய குடும்பத்தார், நவரத்தின வியாபாரிகள், பொன்னாசாரிகள், பெரிய பழுவேட்டரையர் கீழ் வேலை பார்க்கும் (வரிவிதிகளும்) நூற்றுக் கணக்கான அலுவலர்கள், கோட்டை துர்க்கையம்மன் கோயில் பூசாரிகள், பணிவிடைக் கணிகையரும், இதனை விட மதுராந்தகரின் மாளிகையும் அங்கு இருக்கிறது' என்று பதில் கூறினான். அக்கணம் தூக்கம் வந்தியத்தேவனின் கண்களை கொள்ளை கொள்ள அவன் தூங்கச் சென்றான். படுக்கையில் அவன் கண்ட அந்தப் பெண்களின் முகங்கள் கண்முன்னே நின்றது. அரசலாற்றங்கரையில் பார்த்த அந்தப் பெண் முகத்தில் ஒளி வீசி, அழகுச் சுடர் வந்தது. அதில் கம்பீரமும், பெருந்தன்மையும் பொங்கிக் கிடந்தது. பழுவூர் இளவரசி மோகனமும், கவர்ச்சியும் பளிச்சிட நின்றாள். இவர்கள் இருவரையும் பார்த்தாலே பசி தீரும் என்று புலம்பியபடி நித்திரையில் ஆழ்ந்தான். கடும் தூக்கம் அவனை ஆட் கொண்டது.

மறுநாள் சூரியனின் பொன்னொழியுடன், 'பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே என்ற சேத்தன் அமுதனின் இசை இனிமையுடன் கண்விழித்தான் வந்தியத்தேவன். தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கோட்டைக்குப் போக ஆயத்தமானான். அப்போது சேத்தன் அமுதனும் பூசை கங்கரியத்திற்காக புறப்பட்டான். இருவரும் சேர்ந்தே நடந்தனர் வந்தியத்தேவன், 'தம்பி உனக்கு உன் அன்னையைத் தவிர வேறு உற்றார் உறவினர் இல்லையா?' என்று கேட்க சேத்தன் அமுதன் 'என் அன்னையுடன் உடன் பிறந்த தங்கையும், தமையனும் உண்டு. தமக்கை இறந்து விட்டாள். தமையனார் கோடிக் கரை அழகர் கோயிலுக்கு புஸ்ப கங்கரியம் செய்வதோடு, இரவு நேரங்களில் கலங்கரை விளக்கத்தில் தீபமேற்றி பாதுகாப்புப் பணியையும் செய்து வருகிறார். அவருக்கு ஒரு அழகிய பெண் உண்டு. அவள் இனிமையாகப் பாடுவாள். அவள் பெயர் பூங்குழலி. அவள் அழகிற்கு ஈடு யார் உண்டு' என்றான். பூங்குழலி உன் முறைப் பெண் தானே? நீ அவளைக் கல்யாணம் செய்யப் போகிறாயா? என்றான் வந்தியத்தேவன். 'அவளுக்கு தகுந்தவன் நான் இல்லை. இறைவன் என் முன்னால் தோன்றி கைலாசத்திற்கு வருகிறாயா? பூங்குழலியுடன் வாழ்கிறாயா? என்றால் நிச்சயம் பூங்குழலியுடன் வாழ்வேன் என்றுதான் பதில் சொல்வேன்' என்று மகிழ்ந்து கூறினான். வந்தியத்தேவன் பழுவூர் ராணி, பழுவேட்டரையர் என்று வாயை எடுக்க சேத்தன் அமுதன், 'அண்ணா பழுவேட்டரையர்கள் இப்பொழுது சோழ ராஜ்ஜியத்தை ஆளகிறார்கள். நீங்கள் கோட்டைக்குள் போகிறீர்கள். அவர்களைப் பற்றி கதைப்பது உங்களுக்கு ஆபத்து. சுந்தர சோழசக்கரவர்த்தி நோய்வாய்ப் பட்டுள்ளார் வீர பாண்டியனின் அந்தரங்கமான சிலர் பழிக்கு பழிவாங்குவோம்' என்று சபதம் எடுத்துள்ளார்கள் அவர்களிடமிருந்து சக்கரவர்த்தியைக் காக்கவே அவரை பலம் பொருந்திய கோட்டையில் வைத்திருக்கிறார்கள். அவ்வாறாக உரையாடிக் கொண்டு வந்தியத்தேவன் கோட்டை வாயிலை நெருங்கினான். வாயில் காவலரிகளிடம் பழுவூர் ராணி நந்தினியிடம் பெற்றுக்கொண்ட முத்திரை மோதிரத்தை காட்டினான். உடனே 'வழி விடுங்கள்' என்றார் உடனே தடுத்து நின்ற வேல்கள் அகல வந்தியத்தேவன் கோட்டைக்குள் பிரவேசித்தான்.




மிடுக்குடன் தஞ்சை கோட்டையில் உட்புகுந்த வந்தியத்தேவன், 'எப்படி சக்கரவர்த்தியைக் காண்பது? இவரைக் காண சின்ன பழுவேட்டரையரிடம் உத்தரவு கேட்க வேண்டும்' என்ற யோசனையுடன், யாரிடமும் எந்த விசார-ணையும் இன்றி அங்கு போய்ச் சுற்றிப் பார்த்தான்.

அப்பொழுது கோட்டைக்குள் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள் தரித்து, திருநீறும், சந்தனமும், குங்குமமும் வைத்து புலவர் கூட்டம் வரக் கண்டு அவர்கள் கூட்டத்தில் புகுந்து கொண்டு நடந்தான். சின்ன பழுவேட்டரையரின் ஆஸ்தான மண்டபத்துள் யாவரும் கூட்டிச் செல்லப்பட்டனர். வந்தியத்தேவன் ஆஸ்தான மண்டபத்தில் முதலில் கால் எடுத்து வைத்தான். ஓர் உயர்ந்த சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்த சின்னப் பழுவேட்டரையரைச் சுற்றி பல ஓலைகளை கையில் வைத்தபடி ஒருவர், கணக்காயர், காவல் படைத் தலைவர், அத்துடன் ஏவலாளும் வெண்சாமரம் வீசிக் கொண்டு நின்றார். வந்தியத்தேவன் அங்கு செல்ல, சின்ன பழுவேட்டரையர் முக மலர்ச்சியுடன் 'யார் தம்பி நீ? எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்க, 'நான் காஞ்சியில் இருந்து வருகிறேன். இளவரசர் ஓலை கொடுத்து சக்கரவர்த்தியை பார்த்து வர அனுப்பினார்.' என்றான். 'சரி ஓலையை கொடு' என்று கேட்டுக் கொண்டார். பின்னர் அதை வாங்கி படித்துப் பார்த்த பின்னர் அதில் எந்த புதிய விடயமும் இல்லை என்று வைத்து விட்டு, 'தம்பி நான் சக்கரவர்தியிடம் கொடுக்கிறேன். நீ போய் வா' என்றார். அதற்கு வந்தியத்தேவன், 'அதை என் கையில் கொடுக்குமாறு உங்கள் தமையனார் கட்டளை இட்டு இந்த மோதிரமும் கொடுத்து அனுப்பினார்' என்று தன் முத்திரை மோதிரத்தை காட்டினான். உடனே சின்ன பழுவேட்டரையர் 'எங்கே அவரை சந்தித்தாய?' என்று கேட்க, 'கடம்பூரில் ஒரு நாள் இரவு தங்கியிருந்தேன்'. அப்பொழுது அவரை பார்க்க நேர்ந்தது' என்றவுடன் சின்ன பழுவேட்டரையர், ஒரு வீர-னை அழைத்து இவரை சக்கரவர்த்தியிடம் அழைத்து போ என்று கட்டளை பிறப்பித்தான்...

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---

*வெளியீடும்* *அறிமுகமும்*

**நாளைக் குறித்து வைத்து நல்லாதரவு தாருங்கள்!**

**பாடி ஆடு பாப்பா!**

**சிறுவர் பாடல்கள்**

**அமெரிக்கத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சிறந்த நூலுக்கான**

**விருது பெற்ற நூல்.**

ஆசிரியர்: **சபா. அருள்சுப்பிரமணியம். M.A.** (மாதகலான் / அருள்மணி)

நூல்கள்: 1. பாலர், சிறுவருக்கான சிறுவர் பாடல்கள் (332 பக்கங்களுடன்)

2. அடிப்படைத் தமிழ் இலக்கண வினாவிடை (325 வினாக்கள், விடைகளுடன்)

உலகின் பல நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள் கலந்துகொள்ளும் ஒரு நிகழ்வு

நாள்: யூன் 6ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (06–06–2021)

நேரம்: கனடா – காலை 10:00 மணி

நிகழ்வு: 'ZOOM' வழி மெய்நிகர் நிகழ்வாக

**Zoom ID: 647 706 6123**

**ஆதரவிற்கு நன்றி**

அன்புடன்,

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

Thamil Poonka

3001 Markham Road, 21

Markham. ON M1X 1L6

CANADA.



# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy




**Suren Sornalingam**

Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700,**
**Scarborough, ON. M1P 4X4**

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கிகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0% முதல் 1.5% வரை**



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களின் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

**416-757-0034**
**416-994-3861**

# இவ்வார ராசிபலன்

## 21-05-2021 வெள்ளி தொடக்கம் 27-05-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** கடைத்தெடுத்த கவலைகள் காணாமல் போகக்கூடிய நல்ல வாரம். தனவரவு பெருகும். புதிய முதல்களைத் தவிர்க்கவும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். திறமைகள் வெளிப்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். காதலில் பிரிவு ஏற்படும். பாராட்டுக்கள் தேடிவரும். கல்விக் கடன் ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். விவாத முயற்சி வெற்றி தரும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**ரிஷபம்:** தட்டிப்போன வாய்ப்புகள் தானாகக் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். சோதனைகள் நீங்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை மாற்றம் தரும். வாழ்வு நிலை உயரும். மனைவி சலசலப்பு ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவால் பணவிரயம் ஏற்படும். கல்வியில் கவனம் குறையும். லாபம் திருப்தி தரும். வசதிகள் கூடும். உடல் ஆரோக்கியம் குறையும். மனவேதனை குறையும். வலம்புரி வழிபாடு வளம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மிதுனம்:** தீர்த்த யாத்திரையால் திருவருள் கிடைக்கக்கூடிய திருப்தியான வாரம். காரியம் வெற்றி தரும். நட்பு பெருகும். பணப் பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்பு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரவமான நாள். நந்தி வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K





**கடகம்:** அருள் மழையும், பொருள் வரவும் கிடைக்கக்கூடிய வாரம். மதி நுட்பம் தேவை. டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் பலன் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். அற்புதமான நாளாக அமையும். நன்மைகள் நாடிவரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**சிம்மம்:** அடுக்கடுக்கான ஆசைகள் நிறைவேறக் கூடிய அற்புதமான வாரம். யோகமான நாள். உணவுத் தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச் சந்தை தொழில் லாபம் தரும். மன அமைதி நிலவும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனைவி அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனமுடன் செயல்பட வேண்டும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். அம்பிகை வழிபாடு ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வடிவுடை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கன்னி:** விருப்பப்பட்ட திருப்பங்கள் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உடல் நிலையில் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வீர்கள். புதுத் தொழிலை ஆரம்பிக்க முன்வருவீர்கள். சமூக செயல்-லில் ஈடுபடுவீர். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்து கொள்வீர். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லாத பயங்கள் நீங்கும். மனதைரியம் கூடும். உற்சாகம் கூடும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர லட்சுமி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரக்கூடிய நல்ல வாரம். விநாயகர் வழிபாடு வெற்றி தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். திடீர் செலவுகள் ஏற்படும். தன-வரவுகள் தடைப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். குதூகலம் தாண்டவமாகும். நவகிரஹ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சி பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**விருச்சிகம்:** கள்ளம் இல்லாத உள்ளங்களைச் சந்திக்கக் கூடிய நல்ல வாரம். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்று உபாதை வந்துசேரும். குடும்பத்தில் கருத்து வேறு-பாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** நேர்மையான உள்ளங்களுக்கு மேன்மையான வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய வாரம். காரிய வெற்றி கிட்டும் நாளாக அமை-யும். பதவி வாய்ப்பு வரும். வாதகம் விலகும். வருமானம் கை கூடிவரும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் உதவிகள் கிடைக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். பொன்னான நேரங்களாக அமையும். எள்தானம் ஏற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அம்பிகை அம்பாள், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,M



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மகரம்:** மிகையான வரவும் முறையான உறவும் கிடைக்கக்கூடிய வாரம். ஆக்கப் பூர்வமான நாள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. மங்கல செய்தி வரும். முயற்சி பலன் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளா-தாரம் உயரும். பணவரவு உயரும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: இஷ்டதெய்வம், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சிந்தனை முதிர்ச்சியும், சீரான வளர்ச்சியும் பெருகக்கூடிய வாரம். அமைதியான நாள். வளமான வாழ்வு அமையும். திருமண வாய்ப்புகள் கைகூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். பங்குத் தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குலம்காக்கும் கோமாதா, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** வேண்டிய தானமும், விரும்பிய பணமும் கிடைக்கக்கூடிய வாரம். பொறாமைகள் விலகும் நாள். பிரார்த்தனைகள் அதிகரிக்கும். வியாபாரம் சிறக்கும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். தாய் நலனில் கவனம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன செலவு ஏற்படும். உலோகத் தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனைத் தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். அன்னதானம் ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பூமாத்தேவி, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

----------------------------------------



- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும் #46

"Acting is the art of portraying character in the theatre films or other media. However it is a complex art and there is no really satisfactory simple definition", என்கிறது அமெரிக்க கலைக்களஞ்சியம்.

அந்த விளக்க இயலாத நடிப்புக் கலையின் வித்தாகவும், இலக்கணமாகவும் திகழ்பவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். அந்த சகாப்த நாயகனின் குடும்ப வாரிசுகளில் ஒருவராக வெள்ளித்திரையில் அறிமுகமானவர் நமது இளையதிலகம் பிரபு அவர்கள்.

பிரபு அவர்களை சிவாஜி அவர்கள் விட்டுச்சென்ற வெற்றிடத்தை நிரப்பியவர் என்று கலையுலகம் கூறவில்லை. ஆனால், சிவாஜி அவர்களுக்குள்ள



புகழுக்கு பெருமை சேர்க்கக் கூடிய அளவிற்கு தனது திரையுலக பணியைத் தொடர்ந்து வருபவர் நமது பிரபு என்று சொன்னால் மிகையில்லை.

"காவலுக்கு கெட்டிக்காரன்" திரைப்படத்திற்கு வசனம் எழுதிய முத்தமிழறிஞர் கலைஞர் மு கருணாநிதி அவர்கள் பிரபுவிற்கு வசனம் எழுதி-யதை" என் சிந்தைக்கினிய தமிழால் பிரபுவின் தந்தைக்கும் எழுதினேன். இதோ இப்போது தம்பி பிரபுவுக்கும் எழுதியுள்ளேன்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை ஒரு புதிய பாத்திரமேற்று தம்பி பிரபு நிரூபிக்கிறார் என பாராட்டியதை மீண்டும் இங்கு பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்லூரி மாணவனாகவிருந்தபோது பிரபு அவர்களை ஆடுகளங்களில் தான் அதிகம் காண முடியும். ஆம்! அவர் சிறந்ததொரு விளையாட்டு வீரன். ரோமாபுரி கிரேக்க நாட்டு வீரர்களை போல் ஈட்டி எறிவதில் வல்லவர் மகன் பிரபு பற்றி தந்தை சிவாஜி அவர்கள் தனது சுயசரிதையில் இவ்வாறு கூறுகி-றார் அவன் பெரிய ஸ்போர்ட்ஸ்மேன் ஜாவெளின் த்ரோ (Jawalin Throw) சாம்பியன். ஜாவெளின் எறிந்தான் என்றால் கிரவுண்டை விட்டு வெளியே தூக்கி எறிந்து விடுவான். மிக வேகமாக ஓடுவான். டிராக்கில் ஓடினான் என்றால் ஒரு வெண்புரவி ஸ்லோமோஷனில் ஓடி வருவது போல் இருக்கும். அவனை சிறப்பாகப் படிக்க வைத்து, ஒரு நல்ல போலீஸ் அதிகாரியாக உருவாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். என் ஆசை நிறைவேறவில்லை. என் நம்பிக்கை பலிக்காமல் போய்விட்டது". என குறிப்பிட்டுள்ளார்.

பிரபு அவர்கள் கல்லூரி மாணவனாக இருந்த வேளை ஒரு நாள் தான் இயக்கப்போகும் "ஓ மஞ்சு" என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடிக்க வைப்பதற்கு சிவாஜியிடம் வந்து அனுமதி கேட்டார் இயக்குனர் ஸ்ரீதர். மகனின் படிப்பு தடைபடக் கூடாது என்று தந்தை சிவாஜி மறுத்து விட்டார். இச்சம்பவத்தை கவனித்துக்கொண்டிருந்த ஸ்ரீதரின் சகோதரரும், இயக்குனருமான சி வி. ராஜேந்திரன் சிவாஜியின் தம்பியும், சிவாஜி பிலிம்ஸ் நிர்வாகியுமான திரு சண்முகம் அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து திடீரென்று ஒருநாள் இந்த புதுமுக நடிகனைப் பாருங்கள் என்று கூறி என் பக்கத்தில் பிரபுவை நிறுத்தி விட்டார்கள். அதுவும் எனக்கு வில்லனாக!. அந்தப் படம்தான் "சங்கிலி". அதிலிருந்து "சந்திப்பு", "மிருதங்க சக்கரவர்த்தி", "வெள்ளை ரோஜா" போன்ற படங்களில் என்னோடு மோதி இருக்கிறான். என் மகன் என்னை நடிப்பில் வென்றான் என்றால் எனக்கு மகிழ்ச்சி தானே!. நான் யாரும் என்னை வெல்ல கூடாது என்று நினைப்பவனல்ல! எனது பெர்.:.பாமன்ஸ் அப்படி அமைந்துவிடுகிறது. அவ்வளவுதான். பொதுவாக மற்ற நடிகர்களின் நடிப்பு திறமை பற்றி நான் மதிப்பிட்டு சொல்வதில்லை. He is a talented person. அவன் நல்ல திறமை-சாலி, நன்றாக செனலைஸ் செய்தால், இன்னும் சிறப்பான நடி-கனாவான் தண்ணீர் ஒரு தேக்கத்தில் இருக்கிறது. அதை சரியாக வாய்க்கால் வெட்டி கொடுத்தால் எல்லா வயல்களுக்கும் பாயும் அல்லவா! அதைப்போல அவனை பயன்படுத்த வேண்டும். தி-றமையான இயக்குனர்களால் அவனுடைய நடிப்புத் திறமையை இன்னும் சிறப்பாக வெளிக்கொணர முடியும்.

அவனுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அவன் என்னை போல் நடிக்க மாட்டான். ஏதோ தெரிந்தோ, தெரியாமலோ மக்கள், அப்பா மாதிரியே நடிக்கிறான்... நடக்கிறான்.. என்று கூறுகிறார்கள். அது அவனுடைய தவறில்லை. அவன் என்னுடைய மகன் என்ற எண்ணத்தில் மக்கள் பார்க்கும் போது அவ்வாறு தோன்றுகிறது போலும். அவ்வளவுதான்..." என்று தன் மகன் பிரபு பற்றி சொல்லி வைத்தார் நடிகர் திலகம்.

"சிவாஜி"யின் கலையுலக வாரிசு" என்னும் தலைப்பில் "பேசும் படம்" சினிமா சஞ்சிகை 1995 சிறப்பு இதழில் ஒரு கட்டுரையை எழுதி இருந்தது. அதிலிருந்து சில பகுதி-களை இங்கு பதிவு செய்வது பொருத்தமாகும். "சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து பணியாற்றி வரும் நடிகர் திலகம் சிவாஜியின் கலை வாரிசு யார்?

இக்கேள்விக்கு இன்றைய இளைய தலைமுறை நடிகர்களையும், அவர்களின் நடிப்பாற்றலை வைத்து ஆராய்ந்து பார்த்தோமேயானால் வாரிசாக யார் இருக்க முடியும் என்று நிர்ணயிப்பது மிகவும் கடினம்.

சிவாஜிகணேசன் இதுவரை ஏற்று நடித்த கதாபாத்திரங்களை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் அதே மாதிரியான சில பாத்திரங்களில் "இளைய திலகம்" பிரபு நடித்திருக்கிறார். "படிக்காத மேதை", "ரங்கன்", "பட்டிக்காடா பட்டணமா", "மூக்கையா" மற்றும் "இல்லற ஜோதி", "அனார்கலி சலீம்", "கலாட்டா கல்யாணம்", "ஊட்டி வரை உறவு" படங்களில் தோன்றும் இளங்காதலனைப் போன்ற பல பாத்திரங்களில் இளைய திலகம் பிரபு தான் நடித்த பாத்திரங்களில் ஏற்று நடித்தார்.



"நடிகர் திலகம்" அவர்களுடன் முதன் முதலாக இணைந்து நடித்த படம், பிரபுவின் முதல் படமான "சங்கிலி". இப்படத்தில் பிரபு ஒரு காலை இழந்த முடவனாக வருகிறார். "சர்தார் ராஜாளி" எனும் முரட்டு கதாபாத்திரத்தில் நடித்தார். "பராசக்தி" குணசேகரன் என்று கலைஞரால் வடிவமைக்கப்பட்ட சிவாஜிக்கு நிகராக இல்லாவிடினும் பிரபுவின் இளமை வேகமும், துடிப்பான நடிப்பும், உடலமைப்பும், அந்த ராஜாளிக்கு உறுது-ணையாக இருந்தன.

பிரபுவின் துடிப்பான நடிப்பை விமர்சித்த பல பத்திரிகைகள் "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா"? என்றெல்லாம் பாராட்டி எழுதின. 1952 நடிக்க ஆரம்பித்த சிவாஜி அவர்கள் 1964 இல் நூறாவது படமான "நவராத்திரி"யை 12 ஆண்டுகளிலும், 1981இல் நடிக்க ஆரம்பித்த பிரபு அவர்கள் 1994இல் 13 ஆண்டுகளிலும் நிறைவு செய்து "ராஜகுமாரன்" ஆனார்! ஆக தந்தையின் அடிச்சுவட்டிலேயே நடிப்புலகில் வலம் வந்தார்.

இளைய திலகம் பிரபு தனித்து, கதாநாயகனாக நடித்த படங்களில் சிவாஜி நடிப்புச் சாயலிலிருந்து கொஞ்சம் மாறுபட்டு நடித்த படம் "சின்னத்தம்பி". இசையி-னால் மட்டுமல்ல பிரபுவின் நடிப்பு திறமையாலும் வெற்றிப்படமாக அமைந்தது.

பிரபு அவர்களின் தனித்துவமான நடிப்பும், அதை பிரதிபலிக்கும் கதாபாத்திரங்களும் அமைந்தால் நடிகர் திலகம் சிவாஜியின் கலை வாரிசு அவர்தான்! எனது கணிப்பின்படி அவரது கலைப்பயணம் மிக ஆரோக்கியமாகவே தொடர்கின்றது. பல்வேறு குணச்சித்திர பாத்திரங்களை ஏற்று புதிய பரிணாமங்களை வெளிக்காட்டும் இளையதிலகம், அப்பாவின் தப்பாத பிள்ளை தான்.

ஒரு சமயம்! அன்னை இல்லத்தில் சிவாஜி அவர்களின் விருந்தினராக போயிருந்த வேளை பிரபு, தளபதி ராம்குமார் ஆகியோருக்கு வணக்கம் சொன்னதோடு சரி! ஐயாவுக்கருகிலேயே அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததால் பிள்ளைகளோடு பேச வாய்ப்பு கிடைக்கவில்லை. இன்னொரு சமயம் வராமலா போய்விடும்! சிவாஜி ஐயாவின் குடும்பத்திலிருந்து மூன்றாவது தலைமுறை கலைஞர்களும் அறிமுகமாகி விட்டார்கள். குறிப்பாக பிரபு அவர்களின் மூத்த குமாரன் விக்ரம் பிரபு அவர்களும் தாத்தாவின் பெயரை காப்பாற்றி வருகிறார். நல்ல கதைகளை தேர்வு செய்து தனக்கே உரிய பாணியில் நடிப்பதால் அவர் ஒரு "கும்கி" தான்!

நிறைவாக "சிவாஜி பிரபு அறக்கட்டளை" மூலம், இளைய திலகமும், தள-பதி ராம்குமார் சகோதரர்களும் மூன்றாவது தலைமுறை பிள்ளைகளும் இணைந்து ஆண்டு தோறும் சிவா ஐயா அவர்களது பிறந்த நாள், நினைவு நாள் நினைவாக மூத்த கலைஞர்களை பாராட்டி விருதுகள் வழங்கியும் - தந்தையின் புகழுக்கு பெருமை சேர்த்தும், "ஆற்றிவரும்" நன்றியுடனான செயல்களை காலம் என்றும் போற்றி வரும், என்று கூறி ஐயா அவர்களது பெருமையை என்னால் முடிந்தளவு தமிழ் கூறும் கலை உலகிற்கு எடுத்துச் செல்வேன்.

*காட்சிகள்.. நினைவுகள் தொடரும்..*

# இறுதிவணக்கம்

தோற்றம்
23 - 12 - 1960



மறைவு
14 - 05 - 2021

## கேசவதாஸ் (குட்டி) கணேசரட்ணம்

**தமிழ்த்தேசிய நாட்டுப்பற்றாளர்**

தேசியம் போற்றிடும் தீந்தமிழ் மாந்தரில்
திரைகடல் தாண்டிய தீரர்கள் ஆயிரம்!
தாயகம் மூச்சென தமிழ் மொழி வீச்சென
தினம்பணி ஆற்றிய தொண்டர்கள் தனிரகம்!
திரு கேசவதாஸ் கணேசரட்ணம் (குட்டி)
தியாக வீரருள் ஒருவனாய் தன் கடமையை செய்தவன்
மேன்மிகு மலைஎழில் மொன்றியல் நகரினில்
மென்பணி தன்வினை மிகப்பல ஆற்றியும்
மாநிலம் ஒன்றாறியோ உலகத்தமிழர் மனையிலும்
உள்ளகப் பொறுப்பினை ஓய்வின்றிப் புரிந்தும்
ஊடகப் துறையிலும் இயன்றவரை பணிந்த நம்குட்டி
உடல் நலம் குன்றியும் இல்லறம் நன்குறப் பேணியும்
இன்றி அமையாத ஒருவனாய் வாழ்ந்தநம் சோதரன்
இயற்கை எய்தினான் என்பது இழவிலும் ஓர் இழந்த இழப்பு
ஏற்கப் பொறுக்கவில்லை! என்றாலும் இதை வெல்லவும் யாருமில்லை
அன்னார் ஆத்மா அமைதி பெற உலகத்தமிழ் உறவுகள் நாம்
அன்னைத் தமிழ் மண்ணை அகமார இறைஞ்சுகின்றோம் இன்னும்மேலாய்
இன்னுயிரீய்ந்த மாவீரர் போற்றி ஈழமா வீரவணக்கம் தந்தோம்.

**உலகத்தமிழர் செயற்பாட்டாளர்கள்**

**15-05-2021**

# ஈழத்துத் திருக்கோவில்கள் 947



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## நாச்சிமார் திருக்கோயில்
## வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

கோவிலின் நடுவில் அமைந்திருப்பது கருவறை. இதனைக் கர்பக்கிருகம் எனவும் குறிப்பிடுவர். கருவறைச்சுவரின் மூன்று பக்கங்களிலும், விக்கிரகங்களை வைப்பதற்காக நிறுவப்பட்ட கோஷ்ட பஞ்சரங்கள் காணப்படும். இவற்றிலே விக்கிரகங்களை நிறுவுவர். நாச்சிமார்கோவில் கர்ப்பக்கிருகத்தில், மூலமூர்த்தியாக அமைந்துள்ள காமாட்சி அம்பாளின் வடிவம், ஸ்தானக நிலையிலே, கருங்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. அம்பாளின் இடக்கரங்களில் முல்லை, அசோகு, மா, நெய்தல், தாமரை ஆகிய ஐந்துவகை மலர் அரும்புகளும் காணப்படுகின்றன. வலக்கரங்களுள் ஒன்றிலே கரும்பு வில்லும், மற்றொன்றிலே அங்குசமும் காணப்படுகின்றன.

கருவறையை அடுத்து அதனுடன் இணைந்தவாறே காணப்படுவது, அர்த்தமண்டபம். அர்த்தமண்டபத்தின் வாயிலில், துவாரபாலகர்கள் காணப்படுவர். அர்த்த மண்டபத்தின் முன் இருப்பது மகாமண்டபம் என அழைக்கப்படும். நாச்சிமார்கோவில் மகாமண்டபத்திலே சிவன், சண்டேசுவரி, நந்தன கோபாலர், சுக்கிரவாரஅம்மன், முருகன், பிள்ளையார், ஆகியோரின் பித்தளை உருவச்சிலைகள் காணப்படுகின்றன. மகாமண்டபத்து வாசலிலே நந்தா, சகந்தா, என்னும் துவாரபாலகர்களின் சிலைகள் காணப்படுகின்றன. பிள்ளையார், பூமாதேவி, மகாலக்சுமி சமேத விஷ்ணு, விஸ்வப்பிரமா, மகாலக்சுமி, முருகன், வைரவர், நவக்கிரகங்கள் ஆகியோர் இக்கோயிலிலுள்ள பரிவார மூர்த்திகளாவர். கோவிலின் உட்பிரகாரச் சுவர்களிலே சமயகுரவர், காமாட்சி அம்மன், மாரியம்மன், ஐம்முகங்கொண்ட விஸ்வப்பிரம்மன் ஆகியோரின் உருவங்கள் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. திருமுறைகளுக்கும், விராட்புருஷனாகிய விஸ்வப்பிரம்மனுக்கும் பூசை செய்வது, இக்கோவிலுக்கேயுரிய மரபாகக் காணப்படுகின்றது.

ஆரம்பகாலத்திலிருந்து தேர்த்திருவிழாவன்று கட்டுத்தேரிலேறி உலா-வருவதே வழக்கமாகக் காணப்பட்டது. கட்டுத்தேர் என்புத, அவ்வப்போது தேவையேற்படும்போது தற்காலிகமாக அமைப்பதையே குறிக்கும். பின்னர் கோவிலுக்குரிய அழகிய சிற்பத்தேர் அமைக்கப்பட்டது. இத்தேரின் அடித்தளத்திலே, ஆலயத்தோடு தொடர்பான கர்ணபரம் பரைக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காமாட்சிஅம்மன், இலக்குமி, விஸ்வப்பிரம்மன், சரஸ்வதி, பிள்ளையார், நவசக்திகள், ஆறுமுகன், அர்த்தநாரீஸ்வரர், தட்சிணாமூர்த்தி, வைரவர், இராஜராஜேஸ்வரி, துர்க்கை, தனலக்சுமி, கஜலக்சுமி, ஆகியோரின் வடிவங்களும், சரவணப்பொய்கையிலே குமாரக்கடவுள் உற்பவித்தமை, திருக்கைலாயத்திலே பார்வதியின்கோலம், கம்பநதிக்கரையிலே பார்வதி இலிங்கத்தை வழிபாடு செய்தமை முதலிய காட்சிகளும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருவிழாக்கலத்திலே அம்மனுக்குக் கட்டியங் கூறப்படும்போது,

யாழ்ப்பாணம் வண்ணை மாநகரே ஸ்ரீமத்
குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பிகா
ஜாக த்வஜாரோகணாதி தீர்த்தாந்த
பஞ்சதசதின பரியந்தம மஹோத்சவ
கல்யாண சேவாந்தே மனு மய
துவஷ்டா சில்பி விஸ்வக்ஞ வம்சகுல
தேவாலயே அனுமத்த்வஜ மேகவாகன
பஞ்சானன பரபிரம்ம விராட் விஸ்வப்பிரம்ம
குல சமூக சித்தே.

எனக் கூறப்படுகின்றது.

இக்கோவிலில் நித்திய, நைமித்திய வழிபாடுகள் சீராகவும், சிறப்பாகவும் நடைபெறும். தினமும் ஐந்துகாலப்பூசை இடம்பெறும். சில சமயங்களிலே சங்காபிஷேகமும் நடைபெறுவதுண்டு. வெள்ளிக்கிழமை இங்கு நடைபெறும் பூசைகள், சிறப்பானபூசைகளாக அமையும். இந்நாளில் கன்னிகளும், சுமங்கலிகளும் நன்மை பெறும்பொருட்டு, திருவிளக்குப்பூசை வழிபாடு நடைபெறுகின்றது. இக்கோவில் வருடாந்த மகோற்சவம் 1967 ஆம் ஆண்டு முதல் பதினைந்து நாட்களாக நடைபெற்று வருகின்றது. மகாமாரியம்மன் ஊர்வலத்தோடு, திரு-விழா ஆரம்பமாகும். அதற்கடுத்தநாள், குளிர்த்தி, பிள்ளையார்பூசை, கிராமசாந்தி, கொடியேற்றம் என்பன நிகழும். தேர், தீர்த்தம், பூங்காவனம், சண்டேசுவரிபூசை, வைரவர்மடை ஆகியவற்றோடு மகோற்சவம் நிறைவுபெறும். திருவிழாக்காலங்களில் பல்வேறுவிதமான கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதத்திற்குரிய சிறப்பான நாட்கள், மிக விமரிசையாகக் கொண்டாடப்படும்.

மக்கள்சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க இவ்வாலயத்தை ஆதாரமாகக் கொண்டு, பல பொதுப்பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1950 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட கருணைக் கழகம் என்ற அமைப்பு, கோவிலுக்கு வடக்கிலே வாசிகசாலையொன்றை நடத்திவந்துள்ளது. 1958 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட வண்ணை கந்தர்வ கானசபா இசைக்கலையை முன்னேற்றும் நோக்குடன், வகுப்புக்களை நடத்தி சங்கீத ஆர்வத்தை மக்களிடையே ஊக்குவித்தது. வண்ணை கலைவாணர் நாடகமன்றம் என்ற அமைப்பு, நாடகத்துறையிலே பல சேவைகளைப் புரிந்தது. 1960 ஆம் ஆண்டளவில் உருவாகிய வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கூட்டுப்பிரார்த்தனை சபை, வெள்ளிக்கிழமைதோறும் பிள்ளைகள், திருமுறைகளைக் கற்க ஏற்பாடு செய்தது. இவற்றோடு திருக்குறள் வகுப்பு, சமய வகுப்புக்களையும் நடத்தி, இளந்தலைமுறையினரின் சமய ஊக்கத்திற்கு ஆதாரமாயிருந்தது. 1986 ஆம் ஆண்டிலே அன்னதான சபை உருவாக்கப்பட்டது. திருவிழாக்காலங்களிலும், ஆலய விசேட தினங்களிலும், அன்னதானம், குளிர்த்தி ஆகியவற்றை இச்சபை செய்து வருகின்றது. 1989 ஆம் ஆண்டிலே தோன்றிய ஆலயத்தொண்டர் சபை, ஆலயத்தொண்டுகளைச் செய்ய உதவி வருகின்றது.

ஆரம்பகாலத்தில், மருதமரத்தடியில் ஆரம்பித்த தேவதைவழிபாடு, தற்காலத்தில் பெருவளர்ச்சியடைந்து, நாளடைவில், ஆகமவழிபாட்டைக் கொண்ட கோவிலாக மாற்றமடைந்துள் ளது. இக்கோவில், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காமாட்சிஅம்மன் ஆலயம் என வழங்கப்பட்ட போதிலும், நாச்சிமார்கோவில் என்ற பெயரே புகழ்பெற்ற பெயராகி, யாழ்ப்பாணத்திலுள்ள அம்பிகை ஆலயங்களுள் அருளும், பெருமையும் மிக்க ஆலயங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# 1ம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 11-02-1936 ❀ மோட்சம் 05-27-2020



## அமரர். திருநாவுக்கரசு குழந்தைவேலு

(இணுவில்) திதி: 16-05-2021

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லாள்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணியின் கனிந்து

புன்னகையோடு பிரகாசிக்கும் எங்கள் அப்பா. மரணத்திற்கும் வலிக்காமல், அமைதி கொண்டவரே. உங்கள் நினைவுகள் எம்முன் கலந்து உள்ளன அப்பா! வலிகளை வார்த்தைகளால் வெளியே சொல்ல முடியவில்லை அப்பா. ஓசையின்றி மௌனமாக அழுகின்றோம் அப்பா. இறை ஆசியுடன் விண்ணில் கலந்தவரே. உங்கள் அத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்.
சகோதரர், பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்

தகவல் திருநாவுக்கரசு குடும்பத்தினர்
647-346 6442


இலங்கைக்கு வரும் முன்னர் அழகிய திருகோணமலையை நினைவிற் கொள்ளுங்கள்



# TRINCOMALEE
## BEACH RESORT & SPA

தற்போதைய கோரோனாத் தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு பயணம் செய்யும் போது சில நாட்கள் தனிமைப்படுத்தல் அவசியமாகின்ற போது, எமது TRINCOMALEE BEACH RESORT & SPA உங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அதற்கு காரணம் இலங்கை அரசால் CERTIFIED LEVEL 1 என்னும் தனிமைப்படுத்தலுக்கான அங்கீகாரத்தைப் பெற்ற ஹோட்டல் இதுவாகும்.

திருகோணமலைக்கு வரும் முன்னர் TRINCOMALEE BEACH RESORT & SPA வை நினைவிற் கொள்ளுங்கள்

**CERTIFIES LEVEL 01**
SAFE & SECURE MODERN, ELEGANT 4-STAR RESORT OVERLOOKING THE INDIAN OCEAN. ROMANTIC AND CHARMING GATEWAY IN THE TANTALIZING SHORES OF TRINCOMALEE IN SRI LANKA.

GOVERNMENT APPROVED QUARANTINE(COVD 19) HOTEL

+94 77 041 0000 (WhatsApp available)
+94 26 222 0200

trincomaleebeachresort.com








25ஆவது வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்




உதயம் 1311 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 21, 2021

# ஒன்றாரியோ மாகாணத்தில் குடிவரவு அமைச்சின் சேவைகள் அனைத்தும் தொழில் அமைச்சிற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன



### குடிவரவு ஆலோசகர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யவும் தனியான பிரிவு நிறுவப்பட்டுள்ளது

ஒன்றாறியோ மாகாணத்தில் குடியேறி இங்கு பணியாற்ற விரும்பும் வெளிநாட்டவர்களை இங்கு அழைக்க விரும்பும் கனடிய வேலை வழங்குவோரின் விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்யும் பொறுப்பை தற்போது ஒன்றாரியோவின் தொழில் அமைச்சு ஏற்றுள்ளது. மேலும் ஒன்றாறியோவின் பொருளாதாரத்தை அதிகரிக்கத் தேவையான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டவர்களிடமிருந்து வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகளை கவனிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும். இவ்வாறாக வெளிநாட்டு தொழில் வல்லுனர்களை ஒன்றாரியோவிற்கு அழைக்கும் போது, அதில் சம்பந்தப்படும் குடிவரவு ஆலோசகர்களைக் கண்காணிக்கவும் ஒரு தனியான பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*




# மகிந்த இராஜபக்ச போலவே கோத்தாபாய இராஜபக்ச அரசாங்கமும் சீனாவின் பக்கம் சாய்ந்தே பயணிக்கின்றது என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி

மகிந்த இராஜபக்ச அரசாங்கம் போலவே கோத்தாபாய இராஜபக்ச அரசாங்கமும் சீனாவி-ன் பக்கம் சாய்ந்தே பயணிக்கின்றது . அவர்கள் சீனாவின் பக்கம் வலுவாகச் சார்ந்தவர்களாக இருப்பதனால், இந்த நாட்டின் பொருண்மியத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நல்ல செயற்திட்டங்களை
இந்த நாட்டின் அமைவிடம் காரணமாகவுள்ள புவிசார் அரசியல் நலன்களை வைத்து சீனாவிற்கு சாதகமாக சமரசத்திற்கு உட்படுத்துகிற பணியிலேயே ஈடுபடுகின்றனர்.
என தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

*(உள்ளே விபரமான கட்டுரை 8ம் பக்கத்தில்)*



# அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பெற்றவர்கள் தாங்கள் இரண்டாவது தடவை செல்வது பற்றி கவலைப்படத் தேவையில்லை என்கிறார் மருந்துகள் ஆராய்ச்சி நிபுணர் கெல்லி






அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பெற்றவர்கள் தாங்கள் இரண்டாவது தடவைக்குச் செல்வது பற்றி கவலைப்படக்கூடாது, காரணம், இந்த தடுப்பூசி பெற்றவர்கள் நேரம் வரும்போது அவர்கள் உடல் நலத்தைப் பொறுத்தளவில் நல்ல நிலையில் இருக்க வாய்ப்புக்கள் அதிகம் என்றும் சிலர் பரப்பும் வதந்திகளைப் போன்று இந்த அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பாதிப்புக்களைத் தரவல்லது அல்ல என கனடாவின் வாட்டர்லூ பல்கலைக் கழகத்தில் உள்ள மருந்தியல் நிபுணர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*




# ஸ்காபுறோவில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்திக்கொள்ள பல இடங்களில் வாய்ப்புக்கள்




ஸ்காபுறோ நகரில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனா தடுப்பூசி செலுத்தும் ஏற்பாடுகள் பல இடங்களில் செய்யப்பட்டுள்ளன.

பின்வரும் தகவல்களை ஸ்காபுறோ ரூஜ்பார்க் மாகாண அரசி-ன் தொகுதியின் உறுப்பினர் திரு விஜேய் தணிகாசலம் வெளியிட்டுள்ளார்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*